
உ
சிவமயம்


# அருள் ஒளி




ஆவணி
மாத இதழ்

மலர்
37



வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
2005



காராம்பசு,
இடப
வாகனங்களில்
நல்லூரானின்
வீதியுலா



கயிலாய வாகனத்தில்
கந்தவேற் பெருமான்



நாக
வாகனத்தில்
நல்லூர்
வேலன்

உ

# அருள் ஒளி



(மாதாந்த சஞ்சிகை)

*ஆசிரியர்:*

செஞ்சொற்செல்வர்

**திரு.ஆறு.திருமுருகன் அவர்கள்**

*உதவி ஆசிரியர்:*

**சைவத்திரு கா.சிவபாலன் அவர்கள்**

2005 பார்த்திப வருடம் ஆவணி மாதம்

மலர் **37**

*வெளியீடு:* ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2005

## 'தர்மத்தைப் பேணுவோம்'

தர்மம் என்பது ஆழ்ந்தகன்ற பொருளுடையது. எக்காரியத்தின் முடிவும் தர்மத்திலேயே தங்கியுள்ளது. தர்மம் மனிதனுக்கு நற்சீரைக் கொடுப்பது. அழியாப் பேரின்பத்திற்கு வழிகாட்டுவது. தர்மம் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைக் கொடுப்பது. தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கு தர்மம் வழிகாட்டும். ஒருவனை உயர்த்துவது எதுவோ அது தர்மம். தர்மத்தால் மன நிறைவும் நல்வாழ்வும் கிட்டும் இறைவனோடு இனிய உறவை வளர்த்துக் கொள்வதற்கு உதவுவதும் தர்மம். மனித உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு உலகை ஆற்றுப்படுத்துவதற்கு உயர் தர்மங்கள் பேணப்பட வேண்டும். தர்ம சீலங்கள் வளர்ந்தால் சமுகத்தில் ஒற்றுமை ஓங்கி வளரும். தர்மசீலங்கள் என்பன மனிதாபிமானம், தெய்வபக்தி, பரோபகாரம், பணிவு, வெறுப்பின்மை, தானம், அடக்கம், தொண்டு என்பனவும் இவை போன்றனவுமாம். சைவ சமயத்தவர்களின் நூல்கள் யாவும் தர்மத்தை எடுத்துரைப்பன. பொதுவாக அழியா வரம் பெற்ற சமய நூல்கள் யாவும் உலகிற்குத் தர்மத்தினைப் போதிக்கின்றன. இன்று உலகம் முழுவதும் தர்மம் இன்றி அல்லல் உறுகின்றது. எந்த நாட்டிலும் அமைதியில்லை. எங்கும் அச்சத்தோடு வாழும் நிலையே வலுப்பெற்றுச் செல்கிறது. செல்வாக்கு மிக்க நாடும் இன்று அச்சத்தினாற் தவிக்கின்றது. தர்மம் நிலைக்கின்ற போது உலகம் அச்சத்திலிருந்து விடிவு பெறும். எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இனிய தர்மங்கள் என்றும் பேணப்பட வேண்டும். அன்பும், பண்பும், அறத்தின் வழியில் உலகை ஆற்றுப்படுத்த வேண்டும். உலகம் முழுவதும் அபாயகரமான பகை வளர்ந்து கொண்டே போகின்றது. எல்லோரும் சமத்துவமாக சகோதரத்துவமாக மானிடத்தை மதிக்கும் நாள் எந்நாளோ அன்று உலகம் ஆறுதலடையும். எல்லாச் சமயங்களும் சொல்லிய உயர் தர்மங்களும் இன்று ஊசலாடுகின்றது. இந்நிலை மாறி இனிய வாழ்வு மலரவேண்டும்.

"தரும மென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையில் வரும்பொரு ளாகும் அன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ"

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனை சேருமால்"

தர்மம் பற்றி மேற்குறித்த கந்தபுராணப் பாடலூடாக படைத்த கச்சியப்ப சிவாச்சாரியார் விளக்குகிறார். தர்மம் என ஒரு பொருள் உண்டு. அது இருமை இன்பத்தையும் எளிதிற் பயப்பது. தர்மம் தலைகாக்கும் என்பது அறத்தின் வழிப்பட்டவர்கள் கூற்றாகும். தர்மம் உண்மையைக் குறிப்பது உறுதியானது எனவே உலகில் தர்மசிந்தனைகள் வளர்க்கப்பட வேண்டும். சர்வ உலகமும் சஞ்சலத்தில், அந்தரத்தில் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலக ஆத்மீகத் தலைவர்கள் ஒன்றுகூடி உலகை நல்வழிப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் மகிழ்ச்சியாக, சுதந்திரமாக அச்சமின்றி வாழ வழிபிறக்க வேண்டும். உலக அரங்கு ஆன்மீகத்தினூடாக அமைதியை, தர்மத்தை பேணத் தலைப்பட வேண்டுவோம். - ஆசிரியர்

*** *** ***

# உண்மையான கல்வி

சுவாமி விவேகானந்தா



கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களை போட்டுத் திணித்து வைப்பதல்ல. வெறுமனே விடயங்களை சேகரிப்பது மட்டும் கல்வியாகிடா. வாசிகசாலைகள் அன்றோ மகான்களாகவும் அகராதிகள் அன்றோ மகாரிசிகளாகவும் இருக்கவேண்டும். நூற்றுக்கணக்கான நூல்களை நாம் படிக்கலாம். குழந்தையின் மனதில் நொடிக்கு ஐம்பதினாயிரம் வாத்தைகளை திணிக்கலாம். கொள்கை, கோட்பாடு கற்பிக்கலாம். ஆனால் உண்மை கற்பிப்பது ஒரே ஒரு விஞ்ஞானம் அதுதான் மனவியல்.

வெறும் புள்ளி விபரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதல்ல மனதை ஒருமுகப்படுத்துவதுதான் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும். உண்மையில் கல்வி என்பது மூச்சை அடக்குவதில்தான் ஆரம்பிக்கிறது.

மன ஒருமைப்பாட்டைப் பெற்ற பின்னர், அப்பரிபூரணமான கல்வியின் உதவியால் வேண்டியபொழுது தேவையான தகவல்களைச் சுலபமாக சேகரித்துக் கொள்ளமுடியும். எத்தகைய கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத்தருமோ, தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனை சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கிறதோ அதுதான் உண்மையான கல்வியாகும்.

# சிவவேடம் சிவசின்னம் பேணுவோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

**நாம்** ஒவ்வொரு காரியத்தையும் செய்யும் போது இறைவனை நினைந்து, எடுத்த காரியம் எண்ணியபடி நிறைவேற வேண்டும் என வேண்டுதல் செய்து, அக்காரியத்தை ஆற்றுவது எமது சமய மரபு. இறைவனை முன்வைத்துச் செய்யப்படும் எந்தக் கருமமும் நிச்சயம் நல்லபடி கைகூடும். இறைவனைச் சிந்தித்து கருமங்களை ஆற்றும்போது நல்ல வழிகளைக் கையாளுவோமே தவிர, தீய வழிகளை நினைத்தும் பார்க்கமாட்டோம். இறைவன் மீது நமக்குப் பக்தி இருப்பதினால்; உதவுவான் என்னும் நம்பிக்கை இருப்பதினால்; நம்முடைய ஒவ்வொரு செயலையும் ஏன் சிந்தனையையும் சதா, இறைவன் கண்காணித்துக் கொண்டிருப்பதால்; இறைவனுக்குப் பிடிக்காதவற்றை செய்ய நாம் துணிவதில்லை. அவ்வாறு கடவுளுக்கு விரோதமாக எதாவது செய்தால், நாம் என்றோ ஒரு நாள் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற கோட்பாட்டில் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் பயனே, தீய செயல்களில் ஈடுபாடு கொள்ளாமல் இருத்தல் ஆகும். இந்த வகையில், இறை சிந்தனை, இறைபக்தி, இறை நம்பிக்கை, என்பவற்றைக் கொண்டிருப்பவர்கள் பாவங்களைச்செய்ய அஞ்சுகின்றனர்.

"அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்று அறுக்கும்" என்பார்கள். குற்றங்களைக் கண்டு ஆராய்ந்து, குற்றவாளிக்கு உடனுக்குடன் தண்டனை வழங்குபவன் அரசன். அதனால் குற்றச் செயல்களைச் குறைக்க முடிகிறது. சில சமயங்களில் ஏதாவது காரணங்களினால் குற்றவாளிகளுக்கு உடன் தண்டனை கிடைக்காமலும் போகலாம். ஆனால் தெய்வ தண்டனைக்கு எவருமே தப்பிவிட முடியாது.

எவருடைய தனிப்பட்ட செல்வாக்கும்; தவறான வழியில், தெய்வத்தின் சந்நிதியில் எடுபடாது என்பது உண்மை. தெய்வநீதி என்றும் சரிந்ததில்லை, சரியப்போவதுமில்லை. தெய்வத்திற்கு, வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதம் இல்லை. தெய்வத்தின் முன் எல்லோரும் சமம். தெய்வம் தான் நீதி; நீதி தான் தெய்வம். எனவே நீதியின் முன் எல்லோரும் சமம் என்று கொள்வதே சைவநீதி. அதனால் சைவநீதி மேன்மையாகப் போற்றப்படுகின்றது. சைவநீதியைப் பேணுபவர்கள், வாழ்க்கையில் பின்பற்று பவர்கள் எவரோ, அவர்கள்தான் சைவர்கள். சைவர்கள் என்போர் நீதிமான்கள். நீதிமான்கள் ஆக விளங்காத சைவர்கள், உண்மையில் சைவர்கள் அல்லர்; அவர்கள் அசைவர்கள் அதாவது போலிச் சைவர்கள்; வேடதாரிகள் சைவத்தைப் பிறர் பழிப்பதற்கு உடந்தையாக இருப்பவர்கள்.

சிலர் சைவவேடங்கள், சைவ சின்னங்கள் என்பவற்றைப் புறத்தே தாங்கிக் கொண்டு, சைவ நீதிக்குப் புறம்பாகக் கூடாவொழுக்கங்களில் ஈடுபடுகின்றனர். இத்தகைய தீயவர்களால் சைவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தப்படுகிறது. இதனைச் சைவர்கள் அனுமதிக்கக் கூடாது.

சினிமாக்களிலும் நாடகங்களிலும் வில்லன் பாத்திரங்கள் தாங்கி நடிப்பவர்கள், அநேக சந்தர்ப்பங்களில், விபூதி, உருத்திராக்கம், மற்றும் சிவசின்னங்கள் என்பவற்றை அணியப்பெற்றவர்களாகக் காட்சி தருகின்றனர். சந்நியாசி வேடங்களில் கபடதாரிகள் சித்திரிக்கப்படுகின்றனர். ஆக, சிவசின்னங்கள் சிவவேடங்கள் என்பவற்றிற்கும் கபடம், வஞ்சகம், சூது, சூழ்ச்சி, சதிவேலைகள் எனபவற்றிற்கும் தொடர்பு உள்ளதாக மக்களை நம்பும்படி செய்யும் ஒரு முயற்சியாகவே, இதனைக் கொள்ளவேண்டியுள்ளது. கதையை இரசிக்கலாம்; காட்சியைச் சுவைக்கலாம். ஆனால் சிவசின்னங்களுக்கு மதிப்பளிப்போம்.

# பூரணத்தொட்டி

முருகவேபரமநாதன்

**நாத விந்துதன்னை நயமுடனே பாராமல்**
**போத மயக்கின் பொறியழிந்தேன் பூரணமே.** பட்டினத்தடிகள்.

என்குருதேவர் திருக்கேதீசுவரம் சபாரத்தினம் சுவாமிகள் "பூரணத்தொட்டிக்குள் எந்நேரமும் இருக்கவேணும்" என அடிக்கடி சொல்வார்கள். இதன் உள்ளாந்தரத்தை அந்நேரம் அறிய உணரமுடியவில்லை. பிற்காலத்திற் தாயுமான சுவாமிகளின் நறைபழுத்த துறைத்தீந்தமிழ்ப் பாடல்களைப் புரட்டிப் பார்க்கும்போது இப்பிரயோகத்தைக் கண்டு உளம் பூரித்தேன்.

**நடக்கினும் ஓடினும் நிற்கினும்**
**வேறொரு நாட்டம் இன்றிக்**
**கிடக்கினும் செவ்விது இருக்கினும்**
**நல்அருள் கேள்வியிலே**
**தொடக்கும்என் நெஞ்சம் மனம்அற்ற**
**பூரணத் தொட்டிக்குள்ளே**
**முடக்குவன் யான்பர மானந்த**
**நித்திரை மூடிடுமே.** பாயப்புலி-12

தொடக்கும் என் நெஞ்சம்-என்மனமானது கட்டுப்பட்டுக்கிடக்கும், பூரணத் தொட்டிக்குள்ளே-நிறை நிலையிலே, முடக்குவன்யான்-நான் திளைத்திருப்பேன, நித்திரை மூடிடுமே-யோக நித்திரை வாய்க்கும். இதையே தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம் என அவரே பாடியுள்ளார்.

**இப்பாடற் பொருள்:**

நடக்கினும்-நடந்தாலும், ஓடினும்-ஓடினாலும், நிற்கினும்-நின்றாலும், வேறு ஒரு நாட்டம்-அந்நிய சிந்தனை, இன்றி இல்லாமல், கிடந்தாலும் செவ்விது-சுகமாக, இருக்கினும்-இருந்தாலும், நல்-(நல்ல) உத்தமமான, அருள் கேள்வியில்-திருவருட் சம்பந்தமான விசாரணையில், என்-எளியேனுடைய, நெஞ்சம்-மனமானது, தொடக்கும்-கட்டுப்பட்டுக்கிடக்கும் யான்-அடியேன், மனம்அற்ற-மனமிறந்த, பூரணத் தொட்டிக்குள்ளே-வியாபகத் தொட்டிலில், முடக்குவன்-அடங்குவேன், பரமானந்த-சிவானந்தமாகிய, நித்திரை-யோகநித்திரை, மூடிடும்-அடியேனை மூடிக்கொள்ளும். மெய்யடியவர்கள் சதா இறைவனை சிந்தித்துக் கொண்டிருப்பர். நினைப்பும் மறப்பு மற்றுச் சிவமயமாய் இருக்கும் நிறைவான நிலையே பூரணத் தொட்டிலில் நுடங்கும் நிலை எனலாம்.

நின்றும், கிடந்தும், இருந்தும் அவன்றாள் நினை என்பது ஆன்றோர்வாக்கு, எனவே அவர்களின் செயற்பாடெல்லாவற்றிலும் இறை தியானம் செறிந்திருக்கும். இதுவே நிர்ச்சிந்தையாய் இருத்தல். திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி தந்தவர் அதிவீரராம பாண்டியன். இதற்குக் குட்டித்திருவாசகம் என்னும் பெயர். அவ்வளவு உருக்கம்-அதிலே ஓர் பாடல் இது.

**இருக்கினு நிற்கும்போது மிரவு கண்துயிலும் போதும்**
**பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியுண் துய்க்கும் போதும்**
**முருக்கிதழ்க் கனிவாயாரைமுயங்கி நெஞ்சழியும் போதும்**
**திருக்களா வுடைய நண்பா? சிந்தையுன் பாலதாமே.**

துயில்தல்-நித்திரை கொள்ளல், ஊண்துய்த்தல்-உணவு உண்ணல் முருக்கிதழ்க் கனிவாயர்-முருக்கம் - பூப்போன்ற சிவந்த சொண்டை உடையவர்கள். முயங்குதல்-சேர்தல் (இணைவிழைச்சு) சிந்தை-மனம் எத்தவத்தைப்பட்டாலும் ஏது தொழில் செய்தாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே என்பது பட்டினத்தார் பேச்சு. எல்லாவற்றுக்கும் இந்த மனமேகாரணமாதலின் மனதற்ற நிலை வேண்டுமென்கிறார் தாயுமானவர்.

**ஆசைக்கோ ரளவில்லை, அகிலமெல் லாங்கட்டி**
**யாளினுங் கடல்மீதிலே**
**ஆணைசெல வேநினைவர், அளகேச னிகரான்**
**அம்பொன்மிக வைத்தபேரும்**
**நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்**
**நெடுநா ளிருந்த பேரும்**
**நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி**
**நெஞ்சுபுண் ணாவர் எல்லாம்**
**யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும்**
**உறங்குவது மாக முடியும்;**
**உள்ளதே போதுநான் நானெனக் குளறியே**
**ஒன்றைவிட் டொன்று பற்றிப்**
**பாசக்கடற்குளே வீழாமன் மனதற்ற**
**பரிசுத்த நிலையருள்வாய்?**
**பார்க்குமிட மெங்கமொரு நீக்கமற நிறைகின்ற**
**பரிபூர ணானந்தமே?** பரிபூரணானந்தம் 10

இரசவாதவித்தை-செம்பைத் தங்கமாக்கும் கலை, காயகற்பம்-உடல் அழிந்து போகாது செய்யும் மருந்து. அளகேசன் குபேரன் மனது அற்ற-மனம் இறந்த இந்த மனம் குரங்குபோல் ஓடுந்தன்மையது அதைக்கட்டி நிறுத்தி இறைவழிப்படுத்தல் முக்கியம்-மனம் புலன்வழி சென்று பொறி அனுபவங்களைப் பெருமல் உள்ள உரனாற் கட்டி இறைநாட்டம் கொண்டால்-அது இறைவனோடு கரைந்து கரந்துவிடும். அம்மட்டன்றி சிந்தையின் நிறைவே செல்வமெனப்படும். அல்காநல்குரவு (வறுமை) அவாவெனப்படுமேயென்ற உண்மையை உணரவேண்டும். ஆசைப்படப்பட ஆய்வரும் நோய்கள். ஆசையை விடவிட ஆய்வரும் பேரின்பம்.

**காடும் கரையும் மனக்குரங்கு**
**கால்விட்டுஓட, அதன் பிறகே**
**ஓடும் தொழிலால் பயன் உளதோ?**
**ஒன்றாய், பலவாய், உயிர்க்கு உயிராய்**
**ஆடும் கருணைப் பரஞ்சோதி**
**அருளைப் பெறுதற்கு அன்புநிலை**
**தேடும் பருவம் இதுகண்டீர்;**
**சேர வாரும் ஜகத்தீரே.** (காடும் கரையும்)

**ஆசைஎனும் பெருங்காற்றூடுஇலவம்பஞ்சு**
**எனவும் மனது அலையும் காலம்**
**மோசம் வரும், இதனாலே கற்றதும் கேட்**
**டதும் தூர்ந்து, முத்திக்கு ஆன**
**நேசமும் நல் வாசமும் போய்ப் புலனாய் இல்**
**கொடுமை பற்றி நிற்பர், அந்தோ**
**தேசுபழுத்து அருள் பழுத்த பராபரமே!**
**நீர்ஆசை இன்றேல் தெய்வம் உண்டோ**

தூர்ந்து-வீணாகி (ஆசை எனும்)

நல்வாசமும்-புண்ணியத்தலத்தில் வாழ்ந்திருப்பதும்,
நிர்ஆசை-ஆசையின்மை. அவாவின்மை இருந்தாற்றான் தெய்வநிலை உண்டாகும். ஆசையாறாய் பாசம் விடாய் என்பது சியோகசாரம் ஆசையு மன்பு மறுமின் அறுத்தபின், ஈசன் இருந்த இடம் எளிதாமே என்பது திருமந்திரம்.இந்த உலகியல் வாழ்வை உற்று நோக்கின் உண்டுண்டு உறங்கியதே மிச்சம் என (கடலென்றபுவி மீதில்) நடராசப் பற்றும் கூறுகிறது. மனமாசை நீக்கி மனதை இறைலயிப்பிலே ஆழ்த்துவதே நம் பிறப்பின் நோக்கம்.

**சினமிறக்கக் கற்றாலுஞ், சித்தியெல்லாம் பெற்றாலு(ம்)**
**மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே?** பராபரக்கண்ணி 169

கோபம் வராதபடி அப்பியாசஞ் செய்தாலும், அட்டமாசித்திகளைப் பெற்றாலும் மனம் ஒடுங்க பயிற்சி செய்யாதவர்க்கு வீணாகப் பேச்சிருந்து என்ன பயன். எனவே எமக்கென்றோர் செயல் இல்லை. எல்லாம் உன்பரமேயென்று வாழ்பவர்கள் பூரணம் பெறுவர். இறைவனே பரிபூரணன்-அவனையண்டியோர் பூரணம் பெறுவார் மறுபிறப்பே இல்லையவர்க்கு.

**எனக்குஓர் சுதந்திரம் இல்லை அப்**
**பா! எனக்கு எய்ப்பில் வைப்பாய்**
**மனக்கோது அகற்றும் பரம்பொரு**
**ளே! என்னை வாழ்வித்திட**
**நினக்கே பரம், நின்னை நீங்காத**
**பூரண நீள் கருணை**
**தனக்கே பரம், இனிச் சும்மா**
**இருக்கத் தகும் என்றுமே.** பாய்புலி 18

தொட்டில் என்ற சொல் கடைக்குறைந்து தொட்டியெனவும் வழங்கக் காணலாம். இலக்கியங்களிலும் பேச்சு மொழியிலும் பயின்றுவரும். பட்டினத்தார் தொட்டிலிலும், தோள்மேலும், மார்மேலும், தாயதன்னை பாராட்டிச் சீராட்டிய கதையைப் பாட்டாக வடித்துள்ளார். இதையே கண்ணதாசன் கட்டிலுக்குக்கன்னி தொட்டிலுக்குப்பிள்ளை என்று பாடியுள்ளார். சைவசமயிகளின் பாரம் பரியங்களிலொன்று மிருகசாதிகட்குத் தண்ணீர் காட்டல். இதற்காகக் குளங்களையும் கேணிகளையும் வெட்டி வைத்தனர். அதே போலக் கிணறுள்ள வீடுகளில் எல்லாம் கிணற்றுக்கு வெளியே, வீட்டு வேலியையோ சுற்றுமதிலையோ அண்டி நீர்த்தொட்டிகட்டி, அதைத் தினம் துப்பரவாக்கி நீர்நிறைத்து வருவது வழக்கம். இதை ஒரு தர்மமாகக் கொண்டிருந்தார்கள். மாடுகள் ஆடுகள் அதிலே மேய்ந்து மீளும் போதும் வெயிற்காலத்திலும் தண்ணீர் குடித்து தாகந்தீர்க்கும் இது ஒரு தர்ம கைங்கரியம் வள்ளுவர் இதை எம்நெஞ்சிற்படும்படி உறைப்பாகச் சொல்லியுள்ளார். இரவச்சத்திலே

**ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்த தில்** திருக்குறள் 1066

பசுவிற்குத் தண்ணீர் வேண்டும் என்று அறம்நோக்கி இரந்து கேட்டாலும், இந்த இரத்தலைவிட நாவிற்கு இரவானது வேறொன்றும் இல்லை. என்பது இக்குறட்பாவின் பொருள் எனவே என்ன செய்யவேண்டும். செயற்படவேண்டும் மற்றவர்களை (தண்ணீர் தாருங்கள்) எனஇரந்து கையேந்தாமல் வாளியை எடுத்து, ஓர்நீர் நிலையிலே (கிணற்றிலே) தண்ணீர் அள்ளி மாட்டுக்குத் தண்ணீர் வைப்பதே மேலான தர்மம் சேவை என நாம் சிந்திக்கத் தவறக்கூடாது. பழைய தண்ணீர் தொட்டிகளை ஒருமுறை

அசைபோட்டுப் பார்ப்போம். வாழ்வியற் தர்மங்கள் சமயத்தோடு மருவித் தொழிற்பட்டது அக்காலம். இன்று சமயமும் தடுமாறி சமுதாயமும் மாறிவிட்டது.

இன்றைய சைவ சமயிகளின் மத்தியிற் பலமாற்றங்கள் வந்து புகுந்து அவர்களை மடைமாற்றம் செய்து சமயம் வேறு சமூகம் வேறு என்ற சமாந்தரநிலை வந்துவிட்டமை ஒரு சமயச்சரிவையே வெளிப்படுத்துகிறது. உலகம் சுருங்கிவிட்டதென்ற கருதுகோளும், ஊடகவியலும், கொம்பியூட்டர் இணையதளங்களும் மனிதப் போக்கைச் சைவசமயத்தினின்று வேறாக்கி விட்டமை கவனிக்கத்தக்கது. சைவமதக் கோட்பாடுகள், கொள்கைகள், தத்துவங்கள், வாழ்க்கைமுறை, என்பன மக்களின் மனதைத் தொடவேண்டும். வெறும், கிரியைகள், சடங்குகள், ஆடம்பர விழாக்கள், கொண்டாட்டம் மலிந்து நிற்கக் காணலாம். ஆலயங்கள் வருவாய்க்காகவே எழுகின்றன. சமயத்தை கட்டியெழுப்பவல்ல என்பதை எவரும் மறுக்கமுடியாது. வெளிநாட்டு ஆலயங்கள் சம்பாத்தியம் செய்யும் வியாபார நிலையங்களாய் மாறிவிட்டன. ஒரு இஸ்லாமிய ஆலயத்தையும், கிறீத்தவ ஆலயங்களையும் எம் கோயில்களுடன் ஒப்பீடு செய்கையில் இந்த இடைவெளி தெற்றெனப் புலப்படும். மனிதமனம் பக்குவப்படுத்தப்பட்டு, ஆரோக்கியமான சமய முன்னெடுப்புகளைக் கோயில்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய காலகட்டம் இது. ஒரு கிறீத்தவ ஆலயத்திலே புதிதாய்ச்சமயம் மாறியவர்க்கு சுவிஷேஷ வகுப்புக்களை நடத்துகின்றார்கள். நம்மாலயங்களில் இது இல்லவே இல்லை. வெறும் சடங்குகளின் நிலைக்களனாகவே சைவ சமயங்கள் திகழ்கின்றன. இ'.து மாறவேண்டும் மாற்றப்பட வேண்டும். விஞ்ஞானக் கண்ணோட்டத்திலே மக்கள் செல்கிறார்கள். எனவே சமயநோக்கு விஞ்ஞானமயப் படவேண்டும்.

மதத்தில் தான்-விசுவாசம்(நம்பிக்கை) அதுவும் விசாரணைக்குட்படாத விசுவாசம் ஆகும். அறிவிற்கு வரையறை கிடையாது. இதற்கு மேல் அறிவில்லை-இவற்றையே நம்புவோம் என்பதும் அறிவுக்குப் பொருந்தாதது. நம்பிக்கைதான் கடவுள்-சமயம் என்ற நிலையிற்றான்-சமயம் கட்டியெழுப்பப்பட்ட சமுதாயமே சமய நாட்டம் மிக்குக் காணப்படுகிறது. எனவே ஆலயங்கள் அலையாதகுட்டை நீரல்ல மரபு. குட்டை நீர் இப்ப ஆலயம்தான் என்ற சிந்தனை பலரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடவுட் கொள்கை இயற்கை அதீத வாதங்கள் மதத்தை மனித நிறுவனமாகக் கொள்ள வேண்டும். ஐயர் நிறுவனமுமன்று மனிதத்துக்கு விமோசனம் தரும் அறிவு சமயத்தோடு சேரும்போது தெளிவான ஞானம் பிறக்க வேண்டும். ஆக ஞானத்தின் முடிபே ஆத்மவிடுதலை.

இப்படிக் கண்ணோடும் போது இந்த உடம்பு, உயிர், மனம், செயல், பேச்சு என்பன சமயப் போக்கிற் திருந்திய சிந்தனைகளாகி செயற்படல் இன்றியமையாதது. மனம், பேச்சு, செயல் தூய்மையடைவு, புனிதம், பெற வேண்டின் திரிகரண சுத்தி வேண்டும். அறப்பண்புகள் துளிர்விட வேண்டும். தெய்வீகமணம் உள்ளங்களிலே பரிமளிக்கவும் வேண்டும். மனித நேயம் படாமல் அன்பு என்னும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். அன்பே சிவம். இது முடிந்த முடிபு. சொல்லையொத்துச் செயல் மனமும் தூயவராக வாழ்பவரின் உள்ளத்திலே இறைவன் உறைவான். எனவே அதுவே நம் இலட்சியமுமாம் இந்தப் பூரணத் தொட்டியுள் அமிழ்த்தி நிறைவான வாழ்வை அமைக்க உளக்கோயிலிலே அமைந்த இறைவனை ஆராதனை பண்ண வேண்டுமென தாயுமானவர் தெளிவாய் விளக்கியுள்ளார். புறக் கும்பிடை விட்டுஅகக்கும்பிடலை மேற்கொள்வது மேலான வழிபாடு. புறத்தியிலே நக்காமல் உள்ளே நக்குவோமாக

துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன்; கர்ம
துஷ்டதே வதைகளில்லை;
துரியநிறை சாந்ததே வதையர் முனக்கே
தொழும்பனன் பபிஷேகநீர்;
உள்ளுறையி லென்னாவி நைவேத் தியம்; ப்ரான
னோங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது, சதாகால பூஜையா
வொப்புவித்தேன்; கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்ததே னே! சீனியே
திவ்வியரச மியாவுந் திரண்பொகுகு பாகே!
தெவிட்டாத வானந்தமே!
கள்ளனறி வூடுமே வெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லுறவே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. கருணாகரக்கடவுள் 8

இதன் கருத்து:

துள்ளும்-துள்ளிக் குதிக்கின்ற, மறியாம் மனது-மனமாகிய ஆட்டினை பலி கொடுத்தேன்-பலியிட்டேன். கர்ம துஷ்டதேவதைகள் இல்லை-ஆதலால் கன்மமாகிய துட்டதேவதைகள் இனியென்னை வருத்தமாட்டா, துரியம் நிறை துரியபதத்தில் நிறைந்த, சாந்த தேவதையாம் உனக்கேனாகிய அடியேனுடைய அன்பானது, அபிஷேகநீர்-திருமஞ்சனத் தீர்த்தமாகும். உன் உறையில்-தேவரீர் என் மனத்திற் தங்கினால், என் ஆவி-என் உயிரானது, நைவேத்தியம்-நைவேத்தியமாகும். பிராணன்-பிராணவாயுவும் ஓங்குமதி-உயர்ந்த அறிவும், தூபதீபம்-தூப (சாம்பிராணிப்புகை) தீபங்களாகும். இது-இப்படியாக நான் செய்யும் பூசை, ஒருகாலம் அன்று-ஒரு பொழுதின் மாத்திரம் அல்ல, சதாகால பூசைஆ ஒப்புவித்தேன்-எந்நேரமும் (என்) பூசையாய் சமர்ப்பணம் செய்தேன், ஆனபடியால்) கருணைகூர்-மிகுந்த கிருபைசெய், மறைதெள்ளி வடியிட்ட-வேதங்களால் தெளிவித்து வடிக்கப்பட்ட, சமுத்திரப்பிழம்பே-அமிர்தத் தொகுப்பே தெளிந்தேனே- தெளிவானதேனே சீனிதே-சீனிச்சருக்கரையே திவ்விய ரசம் யாவும்-தெய்வீகமான சுவைகள் எல்லாம், திரண்டு ஒழுகுபாகே-ஒன்றா வடிக்கப்பட்ட பாகே, தெவிட்டாத ஆனந்தமே வெறுக்கப்படாத இன்பமே, கள்ளன் அறிவூடும்-கள்ளனாகிய என்னறிவிடத்தும், மெள்ள மெள்ள-பையப்பைய, வெளியாய்க் கலக்கவரும் வெளிப்படக்கலக்க வருகின்ற, நல் உறவே-நன்மையைப் பயக்கும் சுற்றமே (சுற்றம்-இனம்)

உரை பூசை கலியாணசுந்தர முதலியார்

எனவே இலௌகீக வாழ்க்கையைத் துய்த்து மனதில் பெருநிறைவு காண ஓடியாடி உழைக்கிறோமே இதில் ஆயிரத்தில் ஒரு பங்கு எம் சொந்த உயிரின் விடுதலை பற்றிச்சிந்தித்தோமா சினிமாவிலே-நாடகத்திலே-சினிமாப் பாட்டிலே மோகம் கொண்டு சின்னனும் பெரிசும் வாழ்கிறதே. இந்நேரத்தை இறைபக்கம் திருப்பினால் எல்லாரும் பூரணத் தொட்டிக்கும் இறைமயமாக வாழலாம் அப்போ ஆத்ம விடுதலை நிச்சயமாக சிந்திப்போம் சீரூக்கிச் சிறப்புடன் வாழ்வோம்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் துயின்றாலும் மென்றாலும் மன்றாடும் மலர்ப்பாதம் மறவாமல் வாழ்வோம்.

# பிறவி நெடுஞ்சுழியிற் பட்டு

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

எமக்கு மிகவும் நெருக்கமானவர்களுள் குறைந்தது ஒருவராவது ஒவ்வொரு மாதமும் மரணமாகி விடுகிறார்கள். சிலவேளைகளில் மூன்று நான்குபேரோ அதிலும் அதிகமானோரோ காலமாகி விடுகிறார்கள். அவர்களது மரணச்சடங்குகளிலே கலந்து அவர்களது உடல்கள் சாம்பராகப் போவதைப் பார்த்துவிட்டு வரும்போது மனம் தவித்துப் போகும்.

அவர்களுடன் பேசியது, உறவாடியது முதலான பல மகிழ்ச்சியானதும் வேதனையானதுமான நினைவுகள் மனதினுள் நிழலாடி வேதனையைத் தரும். எல்லாம் கனவு போல இருக்கும்.

'இதுதான் இந்த உலக வாழ்க்கை. பிறந்த ஒவ்வொருவரும் ஒருநாள் இறந்தேயாகவேண்டும்'' என்று கூறிக்கொள்வோம். இந்த விடயம் எமக்கு நீண்ட காலமாகத் தெரியும்.

மிகுந்த சுவையான உணவுப் பண்டமொன்றைத் தயாரிக்கிறோம். அது பார்க்க அழகாக இருப்பதற்காகவும் ஏதேதோ செய்கிறோம். இவ்வளவு கஷ்டப்பட்டுச் செய்ததை அப்படியே வைத்திருக்க வேண்டுமென நாம் எண்ணுவதில்லை. உறவுகளுக்குக் கொடுத்து, நாமும் சேர்ந்து உண்டு தீர்த்து விடுகிறோம். அது இல்லாது போனது பற்றி நாம் கவலைப்படுவதில்லை.

நாமும் பிறந்தோம் சில செயல்களைச் செய்கிறோம். ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். அந்த இறப்பு உணவுப்பண்டம் உண்ணப்பட்டுத் தீர்ந்து விடுவது போன்றதுதானென்றாலும் எமது மனம் அதை ஏற்க மறுக்கிறது. நாம் இறப்பதையோ எமது உறவு இறப்பதையோ நாம் விரும்புவதில்லை. அதைத் தவிர்க்கப் படாதபாடு படுகிறோம்.

நித்தம் நித்தம் மரணங்களைச் சந்தித்தாலும் "எமக்கு மரணம் நிச்சயம்'' என்பதை அறிந்துகொண்ட பின்னரும் நாம் மரணமும் பிறப்புமற்ற பெருவாழ்வைப் பெறுவதற்கு எம்மைப் பக்குவப்படுத்த வேண்டுமென்பதைச் சற்றும் சிந்திப்பதில்லை. நாமென்ன? இறையடியார்கள் பலரும் தமது மனங்கள் இதுபற்றிச் சிந்தித்து, உணர மறுக்கின்றன எனக் கவலைப்பட்டுள்ளனர்.

கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி பாடிய நக்கீரதேவர் கூட தமது அந்தாதியிலே

**வீட்டாவி போக உடல்கிடந்து வெந்தீயில்**
**பட்டாங்கு பேமாறு பார்த்திருந்தும்-ஒட்டாதாம்**
**கள்ளலைக்கும் பூஞ்சோலைக் காளத்தி யுள்நின்ற**
**வள்ளலைச் சென்றேத்த மனம்.** என்று பாடி ஏங்கியுள்ளார்.

'ஆவி உடலை விட்டுப்போக, உடல் கிடந்து வெம்மையான தீயில் பட்டு வேகின்றதைப் பார்த்திருந்தும் இந்த மனம், தேன் சிந்தும் பூஞ்சோலை நிறைந்த திருக்காளத்தியில் இருக்கும் இறைவனைப் போய் ஏத்த மறுக்கின்றதே' என்று இப்பாடலிலே கவலைப்பட்டுள்ளார்.

ஏன் இப்படி இந்த மனம் இருக்கின்றது? இதற்குப் பதிலை திருவருட்பயன் அழகாகக் கூறுகிறது

**பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது**

'அதிகமாக எதுவும் கூறத்தேவையில்லை. பல மொழிகள் ஏன்? உண்மையை உணரும் நிலையை அறியாது நிற்கும் இந்தத் தன்மையை ஆணவம் தந்திருக்கிறது' என மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் திருவருட்பயன் விடை பகர்கிறது. ஆன்மாவைப் பற்றிநிற்கும் மலம்விலகும்போது பரம்பொருளுடன் ஐக்கியப்படும் பெருவாழ்வு ஆன்மாவிற்குக் கிட்டும். அதற்கு இறையருள் கைகொடுக்க வேண்டும்.

நக்கீரதேவர் தமது அந்தாதியிலே அதனையும், காளத்திநாதனிடம் வேண்டிப் பாடியுள்ளார்.

**நிலையில் பிறவி நெடுஞ்சுழியிற் பட்டுத்**
**தலைவ தடுமாறு கின்றேன்-தொலைவின்றிப்**
**போந்தேறக் கைதாராய் காளத்திப் புத்தேளிர்**
**வேந்தேயிப் பாசத்தை விட்டு.**

என நக்கீரதேவர் தமது மனம் தடுமாறும் காரணத்தைக்கூறி அதிலிருந்து தப்ப உதவிகேட்டுக் காளத்தி நாதனிடம் இறைஞ்சியுள்ளார். "இந்த நிலையில்லாத பிறவியினுள் அகப்பட்டுவிட்டேன் எந்த நிமிடமும் இறப்பு வரும். பிறப்பு மிறப்புமாக நிலையற்ற பிறவி இது. வள்ளுவர் பிறவிப் பெருங்கடல் என்பார். கடலைவிடக் கொடியது அதனுள்ளேயுள்ள சுழி. சுழியுள் நெடுஞ்சுழி தலைவா, நெடுஞ்சுழியில் அகப்பட்டுத் தடுமாறுகின்றேன். இந்தப் பயங்கரத்திலிருந்து தப்பிப்பிழைக்க வேண்டும். காளத்தியிலுள்ள தேவர்களின் அரசே இந்தப் பாசத்தைவிட்டு விரைவாக வெளியேறக் கைகொடையா!" என்று வேண்டினார். ஒரு பெருஞ்சுழியில் அகப்பட்டவன் பதைத்துத் துடித்துக் கெஞ்சுவதையொத்த கோரிக்கை இதுவாகும்.

"'காப்பது' என்றால் இப்போது வந்து காப்பாற்றியாக வேண்டும். பாசத்தை நீக்க வல்லவனே கயிலாயத்திலிருப்போனே பாசத்தை விட்டுவிட்டு, உன் பாதத்தின் கீழ் எனது பக்தியை வைக்கச் செய். நீ என்னைச் காக்கும்வகை இதுதான்." என்று தொடர்ந்து தனது அந்தாதியிலே நக்கீரதேவர் கோரியுள்ளார்.

**பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழேயென்**
**நேசத்தை வைக்க நினைகண்டாய்-பாசத்தை**
**நீக்குமா வல்ல கயிலாயா நீ என்னைக்**
**காக்குமா (று) இத்தனையே காண்.**

என்பது அவரது கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதிப் பாடல்.

நாமும் நெடுஞ்சுழியிற்பட்டு மிகுந்த ஆபத்தான நிலையிலேதானிருக்கின்றோம். தடுமாறிக்கிடக்கின்றோம். அதனால் நாம் ஆபத்திலிருப்பதுகூட எமக்குப் புரியவில்லை. "பாசத்தை விட்டு இறைவனது பாதத்தின் கீழே எம் நேசத்தை வைக்க வேண்டும்" என்னும் எண்ணம் எமக்கு ஏற்பட்டேயாகவேண்டும்.

**உங்கள் அபிமான "அருள்ஒளி" கிடைக்கும் இடங்கள்**

**அலுவலகம்:**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.**

# விபூதி திருமண்ணின் மகிமை

செல்வி அ.புவனா
யாழ்.இராமநாதன் கல்லூரி

"விறகுக்கட்டையை அக்கினியானது பஸ்பமாக்குவது போல், ஞானம் என்கின்ற அக்னி எல்லாக் கருமங்களையும் பஸ்பமாக்குகின்றது" என்று பகவக்கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கின்றார். பஸ்பமாகிய விபூதி இவ்விதம் கர்மங்களை எரித்தபின் நிற்கும் ஞானத்துக்கே அடையாளமாகும்.

'விபூதி பூதிரைச்வர்யம்' என்று "அமர கோச"த்தில் உள்ளது. அதாவது விபூதி என்பதும், ஐஸ்வர்யம் என்பதும் ஒரே பொருள் தரும்.

எந்தப்பொருளையும் தீயிலிட்டால் முதலில் கறுப்பாக ஆகும். பிறகு இன்னும் அக்னியுள் போட்டால் நீற்றுப்போகும். சுத்த வெளுப்பாக ஆகிவிடும். அப்புறம் தீயில் போட்டால் அது மாறாது. அதுவே முடிவானநிலை. இப்படி நீற்றுப் போனதே திருநீறு. நீறு பஸ்மம் எனப்படும். ஈசுவரன் மஹா பஸ்மம். எல்லாம் அழிந்த பின்னும் இவற்றை அழித்துவிட்டு எஞ்சி நிற்கிற அழியாத சத்யமான மஹாபஸ்மம் இவன். பஸ்மமாக நீற்று வெளுத்துப் போவதற்கு முந்திய மாறுதல் கறுப்பு. அதுதான் கரி. நிலக்கரி தான் இவ்வுலக ஐஸ்வர்யத்தில் இக்காலத்தில் முதலிடம் பெற்றுள்ளது. அதிகமாக விலைமதிப்பான வைரமும் அதுதான். இந்தக் கரியாக மாறிய பொருளைவிட மிகவும் உயர்ந்தாக நீற்றுப்போன திருநீறு திருநீற்றுக்கு மேலான பொருளே கிடையாது.

பல வர்ணங்களைக் கொண்ட பொருள்களைக் காண்கின்றோம். ஆனால் இந்த வர்ணங்கள் எல்லாம் வஸ்துவை எரித்தபின் மாறிவிடுகின்றன. எல்லாம் கடைசியில் வெளுத்துப் போய்விடும். நாம் "சாயம் வெளுத்துப்போய் விட்டது" என்கிறோம். சாயம் என்பது வேஷம். வேஷம் போனபின் இருப்பதை மெய். மெய்யான ஆத்மாவின் தூய்மைக்குப் பெரிய அடையாளமாக இருப்பது விபூதி தான். இதை இந்தப் பொய்யான மெய்(தேகம்) முழுவதிலும் பூசிக்கொள்ள வேண்டும். எல்லாம் எரித்தபின் எஞ்சி நிற்பது விபூதியின் வெண்மை ஒன்றுதான். மற்ற சாயமெல்லாம் பொய். வெண்மையே உண்மை. ஞானம் என்னும் தீமூண்ட பின் காரியங்கள் எல்லாம் பஸ்மமாகி விடும் என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா உபதேசித்ததில் 'பஸ்மமாகி விடும்' என்றால் எல்லாம் அழிந்து, புத்தர் சொன்ன மாதிரி சூனியமாகிவிடும் என்று அர்த்தமல்ல. விறகுக் கட்டைகள் தீயில் எரிந்த பின்னர் எல்லாமே சூனியமாகி விடவில்லை. அப்போது எஞ்சி நிற்பது நீறு. அவ்வாறே ஞானம் என்னும் தீயில் கர்மாக்கள் யாவும் எரிந்தபின்னரும் ஆதாரமான ஒன்று எஞ்சி நிற்கும். மிகுந்து நிற்பதே மகாபஸ்மமான பரமாத்மா.

திருத்தொண்டர் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனார் "முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என்று பாடினார்.

விபூதியைத் தேகம் முழுவதும் பூசிக்கொள்ள வேண்டும். விபூதியைத் தரித்துக் கொள்வதினால் சகல ஐஸ்வர்யங்களையும் அடையலாம். பெரும்பாலான மக்கள் விபூதியை அணிகின்றனர். திருநீறு என்பதே சாதாரண மக்களால் தன்னூறு தண்ணூறு எனப்படுகின்றது. கோயிலுக்குப் போனாலும் ஏதாவது பீடாபரிகாரமாக வேண்டுமானாலும் "அன்னூறு கொடுங்கள்" என்று மக்கள் கேட்பதை நாம் சகஜமாகப் பார்க்கிறோம். பூத, பிரேதபைசாது சேஷ்டைகளிலிருந்து காப்பாற்றும் பெரிய ரக்ஷையாக இருப்பது விபூதியே.

வைஷ்ணவர் திருமண் இடுவார்கள். துளசிச் செடியின் அடியில் உள்ள மண்ணை இட்டுக் கொள்வது வழக்கம்.

மண்ணை இட்டுக்கொள்வது திருநீற்றை இட்டுக் கொள்வதும் நமக்கு உயர்ந்த தத்துவத்தையே விளக்குகின்றன. மன்னனும் மாசறக்கற்றோரும் ஒருபிடி சாம்பலாகி விடுகின்றார்கள். நாம் கடைசியில் சாம்பலாகத்தான் போகிறோம். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகின்றது. மண்ணிலே பிறந்த நாம் மண்ணிலேதான் மடியப்போகின்றோம். மண்ணிலே பிறந்த மரம் கடைசியில் மக்கி அதே மண்ணோடு மண்ணாகத்தானே ஆகிறது? நம்மை முடிவில் அடக்கிக் கொள்ளப்போகிற தத்துவம் அதுதான். இதை நம்மில் ஞாபகப்படுத்திக் கொள்ளவே நம்மில்சிலர் திருமண் அணிகின்றோம். ஸ்ரீரங்கத்தில் ம்ருத் ஸர்க்ரஹணம் செய்யும் போது வில்வவிருஷ மண்ணை எடுக்கின்றார்கள்.

வில்வம், லக்ஷ்மி வசிக்குமிடம் பலவும் லக்ஷ்மியின் வாசஸ்தானம். விபூதி, பசுவின் சாணத்தை அக்கினியிலிட்டு பஸ்மமாக்குவதிலிருந்து உண்டாகிறது. பசுவின் சாணம் எல்லாத் துர்நாற்றங்களையும் போக்க உதவுகின்றது. மண்ணெண்ணையைக் காட்டிலும் அதிக துர்நாற்றம் உள்ள வஸ்து இல்லை எனலாம். அந்த துர்நாற்றத்தைப் போக்கக் கூட பசுவின் சாணத்தை உபயோகிக்கிறோம். நமது உடல் பல துர்நாற்றங்களை உடையது இந்த உடலைச் சுத்தப்படுத்தி இதனுள் உள்ள ஆத்மாவையும் பரிசுத்தப்படுத்த வல்லது பஸ்மமாகிய திருநீறு. மஹா பஸ்மமான பரமாத்மாவும் விபூதி என்னும் பஸ்பமும் ஒன்றானபடியால் விபூதியை அணிவதனால் ஈச்வர சாஷாத்காரம் ஏற்படும்.

நாம் ஒவ்வொருவரும் குலாசாரத்தை அனுசரித்து திருநீற்றையோ திரு மண்ணையோ இடவேண்டும். திருமண் இடுவதற்கு "நாமம் போடுவது" என்று பெயர். மகா விஷ்ணுவுக்கு கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திரிவிக்ரம், விமண, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர, என்று பன்னிரு நாமங்கள் முக்கியம். இந்த துவாதச நாமங்களைச் சொல்லிப் 12 இடங்களில் திருநாமங்களை இட்டுக்கொள்வார்கள். இப்படி பகவத்நாமத்தைச் சொல்லி போட்டுக் கொள்வதாலேயே "நாமம் போடுவது" என்று பெயர் வந்துவிட்டது.

திருமண், திருநீறு இவற்றைத் தரிப்பது பரமாம்மஸ்வருபத்தின் உண்மையையும், உலகில் உள்ள பொருள்களின் அநித்தியமான நிலையையும் நினைவூட்டுகிறது.


**சிவபூமி கண்தானச் சபை**

**தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**

**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**

**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**



**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**



**தொடர்புகளுக்கு:**
**ஆறு.திருமுருகன்**
தொலைபேசி
021-222 6550

**கண் வைத்திய நிபுணர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr. சிவந்தா, 021-222 3149**
யாழ்.போதனா வைத்தியசாலை



# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதாஜி



இதுவரை காலமும் **"அருள் ஒளியில்"** கந்தபுராண சிறுவர் அமுதம் என்னும் தொடர் தொடராக வெளிவந்தது. இது சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோரதும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இத்தொடரை எழுதிய மாதாஜி பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ள இப்பந்தியூடாக உங்களுடன் சந்திக்கிறோம். யாழ்ப்பாணம் குப்பிளானைப் பிறப்பிடமாக கொண்ட செல்வி சின்னையா விசாலாட்சி என்னும் இயற்பெயரைக் கொண்டவரே மாதாஜி. இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். பல நூல்களை எழுதியவர் பத்திரிகைகளில் சமயசம்பந்தமான பல கட்டுரைகளை எழுதியவர். கிளிநொச்சி குருகுலத்தில் தமது குருகுல வாழ்க்கை வாழ்ந்தவர். இவரது கந்தபுராண சிறுவர் அமுதம் என்னும் தொடர் மிக விரைவில் **"கந்தபுராண அமுதம்"** என்னும் பெயரில் நூலாக வெளிவர உள்ளது. இவரது சேவை மேலும் தொடர அருள் ஒளி வாசகர்களோடு நாமும் வாழ்த்துகிறோம்.

**நிறைவுரை:**

கந்தபுராணம் உயர்ந்த உண்மைப் பொருளை விளக்கும் கருவூலம் கந்த புராணத்தில் அடங்கிய உட்கருத்தை நன்கு ஆராய்வது நமது கடமையல்ல. கந்தபுராணம் படிப்பதன் பயனுமாகும்.

சிவபெருமான் தான் முருகப்பெருமான் என்பதை இந்தப் படிப்பின் மூலம் அறிந்தோம்.

தேவர்கள் அசுரர்களால் வருத்தப்பட வேண்டி வந்தது, சிவபெருமான் முதற் கடவுள் என்பதைத் தேவர்கள் மறந்தார்கள். சூரபன்மன் முதலியோர் தம் வாழ்வும் குடியும் கெடக்காரணமாக இருந்தது, எம்பெருமான் செய்த நன்றிகளை மறந்தமையாகும்.

எனவே கந்தபுராணம் சைவசமய மக்களுக்கு எப்போதும் சிவனை மறக்காதே. நன்றியை மறக்காதேயென்று வலியுறுத்துகின்றது. சிவனையும் நன்றியையும் மறந்தால் பெருங்கேடுதான் என்பதை நாம் உணர முடிகின்றதல்லவா.

ஆணவம் - சூரபன்மன் கன்மமலம் - சிங்கமாசூரன் மாயாமலம் - தாரகன்
இம்மூன்று மலங்களையும் முருகவேள் அடக்கி அருளினார்.

ஞானசக்தி - வேல் கிரியாசக்தி - தெய்வயானை
இச்சாசக்தி - வள்ளிநாயகி மூன்றுடனும் கூடியவர் - பரம்பொருள்
கற்புமணம் - தெய்வயானை களவுமணம் - வள்ளிநாயகி

இரு மணங்களின் ஒழுக்கங்களைக் கொண்டவர் முருகப்பெருமான்.

ஐம்புல வேடர்களாக இருந்தவர் வேடர்கள் ஜீவான்மாக இருந்தவர் வள்ளிநாயகி ஐம்புல வேடர்களிலிருந்து ஜீவான்மாவை விடுதலை செய்தவர் முருகப்பெருமான்.

விந்து-மயில், நாதம்-சேவல், கலை-வேல், இந்த மூன்றுமாகவுள்ளவர் முருகப்பெருமான்.

வலப்புறம் வள்ளி வள்ளியம்மையின் திருக்கரத்தில் தாமரைமலர். இடப்புறத்தில் தெய்வயானை இவரின் திருக்கரத்தில் நீலோற்பலம்.

கதிரவனைக் கண்டால் தாமரை மலரும் சந்திரனைக் கண்டு நீலோற்பலம் மலரும் முருகவேளின் வலக்கண் சூரியன், இடக்கண் சந்திரன், முருகப்பெருமானின் திருக்கண்கள் எப்போதும் இமையாதவை. எப்போதும் திறந்த விழிகள்.

வலக்கண்ணாகிய சூரியவொளியில் வள்ளிநாயகியின் கரத்திலுள்ள தாமரை எப்போதும் மலரும். அதுபோல எப்போதும் இடக்கண்ணாகிய சந்திரவொளியில் தெய்வயானையின் கரத்திலுள்ள நீலோற்பலம் மலரும். இதனால் முருகப்பெருமானை அணுகி அன்புடன் வழிபடுவோரின் வாழ்வு என்றும் பெருவாழ்வாக மலர்ந்து காணப்படும்.

உயிர்கள் பெறும்பேறு மூன்று. இகம், பரம், வீடு என்பனவாம். முருகப்பெருமான் மூன்று பேறுகளில் வள்ளிநாயகி மூலம் இகத்தையும், தெய்வயானை அம்மை மூலம் பரத்தையும், தம் திருக்கரத்தில் விளங்கும் வேலாயுதத்தின் மூலம் வீடு பேற்றையும் திருவருள் புரிகின்றார்.

எனவே நாம் எல்லோரும் கலியுகவரதராகிய கந்தப்பெருமானை வந்தித்து சிந்தித்து வணங்கி எல்லா நலன்களும் பெறுவோமாக.

**வற்ற வருள்சேர் குமரேசன் வண்தாதை தன்னைச்**
**சொற்றாரு மாராய்ந் திருவாரும் துகளுறுமே**
**கற்றாரும் தற்பரன் முயல்வாருங் கசிந்து கேட்கல்**
**உற்றாரும் வீடுநெறிப்பாலின் உறுவரன்றே.**

**விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்**
**மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி**
**வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.**

**முருகனே செந்தி முதல்வனே மாயோன்**
**மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்**
**தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**

**ஆனா அமுதே அயில் வேல் அரசே**
**ஞான கரனே நவிலத் தகுமோ**
**யானா கியஎன் னைவிழுங் கிவெறுந்**
**தானாய் நிலைநின் றதுதற் பரமே.**

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளீத்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவே லுண்டே துணை.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள்வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

பாதி மதி நதி போது மணிசடை
நாத னருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொரு விழிகாகமுற அருள்
மாயன ரிதிரு மருகோனே
கால னெனை யணுகாமலுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலம்வரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலை தனில் உறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விட வல பெருமாளே.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

(முற்றும்)

சுபம்.

சிறுவர் விருந்து

# அழுக்காறு எனும் ஒரு பாவி...

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து.

எல்லோரும் நலமாக இருக்கப் பிரார்த்தனை செய்வோம். இன்றைக்கு மனிதரிடம்உள்ள பொறாமை என்ற கெட்டகுணம் எவ்வளவு கெடுதியைச் செய்யும். என்பதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லுகிறேன் பொறாமைக் குணத்தை "அழுக்காறு என ஒரு பாவி" என்கிறார் வள்ளுவர். எத்தகைய பழிபாவத்திற்கும் அஞ்சாத மனநோய் பொறாமை. பொறாமை என்றால் அழுக்காறு. இந்தக் குணம் சிறந்த அறிவாளியையும் கூடக் கெடுத்துவிடும்.

தேவர்களுடைய ஆசிரியர் வியாழபகவான். சகல வேதங்களும் சாஸ்திரங்களும் கலைகளும் நீதியும் அறிந்தவர் குரு பகவான் என்று எல்லோராலும் வணங்கப்படுபவர். இப்படிப்பட்ட குருபகவானே இந்தப் பொறாமையால் என்ன பாடுபட்டார் தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள்.

குருவாகிய வியாழனுக்கு சம்வர்த்தர் என்ற ஒரு தம்பி இருந்தார். அறிவில் அண்ணனுக்கு ஒப்பானவர். மிகவும் நல்லவர். இவர் மேல் தேவர்களுக்கு மிகுந்த விருப்பம். இதைக்கண்டு வியாழபகவான் பொறாமை கொண்டார். பாருங்களேன்! ஒருவர் நல்லாயிருப்பதைக் கண்டே சிலருக்குப் பொறாமை உண்டாகி விடுகிறது. வியாழ பகவான் தன் தம்பியின் மேல் கொண்ட பொறாமையால் பல விதமான தொந்தரவுகளை தம்பிக்கு கொடுத்தார். தம்பியான சம்வர்த்தர் பொறுத்துக்கொண்டே இருந்தார். வியாழனோ மேலும் மேலும் பொறுக்க முடியாத உபத்திரவங்களைச் செய்தார். எதிர்த்துப் போராட விரும்பாத தம்பியார் உருவம் மாறி பூவுலகத்திற்கு வந்து பைத்தியக்காரனைப் போல ஊர் ஊராகத் திரிந்தார்.

அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த சூரிய குலத்து அரசனான மருத்தன் என்ற அரசன் கடும் தவம் செய்து சிவபெருமானுடைய அருளைப் பெற்றான். சிவபெருமான் மிகப்பெரிய பொற்குவியலையும் மருத்தனுக்குக் கொடுத்தார். மருத்தன் மிகப்பெரிய யாகம் ஒன்று செய்ய விரும்பினான். அந்த யாகத்தை முறைப்படி குருவாக இருந்து நடத்திக் கொடுப்பதற்கு வியாழபகவானை வேண்டினான். யாகத்தின் பலனாக மிகச் சிறந்த நிலையை மருத்தன் அடைவான் என்ற எண்ணத்தால் அந்த யாகத்தை நடத்திக் கொடுக்க வியாழன் விரும்பவில்லை. மருத்தன் இறைவன் அருளால் சம்வர்த்தர் மிகச்சிறந்த குரு என்பதை அறிந்து அவரைத் தேடிக் கண்டு பிடித்தான். யாகத்தை நடத்தித் தரும்படி பணிவோடு கேட்டுக் கொண்டான். சம்வர்த்தர் அண்ணனுக்குப் பயந்தார். அரசன் பலமுறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதால் யாகத்தை நடத்த ஒப்புக்கொண்டார். இதையறிந்த வியாழனுக்கு தம்பியிடம் பொறாமை இன்னும் அதிகமாயிற்று. அவர் பொறாமையால் மனம் கறுத்து உடம்பு வெளுத்து மெலிந்து நோயாளி போல் ஆகி விட்டார். தேவர்களுக்கு ராஜாவான தேவேந்திரன் குருவைக் கண்டு மிகவும் கவலை அடைந்தான். "சுவாமி ஏன் இப்படி மெலிந்து விட்டீர். நலமாக இருக்கிறீர்களா? பணியாளர்கள் உங்களைச் சரியாகக் கவனிக்கவில்லையா? தேவர்கள் ஏதாவது குறை செய்தார்களா? என்ன காரணத்தால் இப்படி நலிந்து போனீர்கள்?"

என்று ஆதரவோடு விசாரித்தான். வியாழனுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் கண்ணீர் நிரம்பியது. "அரசே! எனக்கு ஒரு குறையும் இல்லை" என்று கம்மிய குரலில் தலை குனிந்து சொன்னார். "இல்லை இல்லை நீங்கள் ஏதோ பெரிதாகத் துக்கப்படுகிறீர்கள். உங்கள் உடம்பு வெளுத்துவிட்டது. மிகவும் மெலிந்து விட்டது என்ன குறை உங்களுக்கு சொல்லுங்கள். நான் தீர்த்து வைக்கிறேன்." என்று அன்போடு இந்திரன் கேட்டான். வியாழன் "சம்வர்த்தன் பூமியிலே ஒரு பெரிய யாகம் செய்யப் போகிறான். அதை நினைக்க நினைக்க எனக்கு மனப்பாரம் கூடிவிட்டது. என்று மெதுவாக விஷயத்தைச் சொன்னார். இந்திரன் சிரித்தான். "ஐயா! உங்களுக்கு என்ன குறை! தாங்கள் எங்களுடைய குரு. மகாபுத்திமான். நாங்கள் எல்லாம் உமது அடிமைகள் பைத்தியக்காரனைப் போன்ற உமது தம்பியால் உமக்கு என்ன தீமை வரும்? ஏன் பொறாமைப்படுகிறீர்" என்றான் இந்திரன். வியாழனுக்குக் கோபம் வந்துவிட்டது. இந்திரனுடைய குற்றங்களையும் பலவீனங்களையும் சுட்டிக் காட்டினான். இத்துடன் சம்வர்த்தன் யாகம் செய்தால் அதன் பலனாக மருத்தன் என்ற ராசா இந்திரப் பதவியை அடைந்து விடுவான். என்று சொல்லி இந்திரனுக்கும் பொறாமையை ஊட்டிவிட்டார்.

இந்திரன் அக்கினி தேவனைக் கூப்பிட்டு மருத்தனிடம் தூது அனுப்பினான். நெருப்புக் கடவுள் மருத்தனிடம் போனான் அந்த ராஜா மிகவும் பயபக்தியுடன் அக்கினி தேவனைப் பூஜை செய்து வரவேற்றான். அக்கினியும் "மருத்தா உன் யாகத்தினை நடத்த நான் வியாழ பகவானைக் கூட்டி வருகிறேன். இந்த சம்வர்த்தனை விட்டு விடு" என்றான். மருத்தனோ "அக்கினி தேவனே! நான் இந்தப் பெரியவரை யாகத்திற்குக் குருவாக ஏற்றுக்கொண்டு விட்டேன். நான் வற்புறுத்தியதால் அவரும் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார். இனி இவரைத் தள்ளிவிட முடியாது" என்று பணிவோடு சொன்னான். அக்கினிக்குக் கோபம் வந்து விட்டது. மருத்தனை பலவாறு பயமுறுத்தினான். இதைக் கண்ட சம்வர்த்தனுக்கு மகாகோபம் வந்துவிட்டது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று சொல்வார்கள் அல்லவா? அது போல சம்வர்த்தனுடைய கோபம் அக்கினிதேவனைச் சுட்டது. "அக்கினியே! திரும்பிச் செல் குழப்பம் செய்யாதே" என்று அவர் கட்டளையிட்டார். அவரது ஆற்றலைத் தெரிந்து கொண்ட அக்கினி பகவான் திரும்பிப் போய் இந்திரனுக்கு நடந்ததைச்சொன்னான்.இந்திரன் நம்பவில்லை. அவன் தன் வஜ்ஜிராயுதத்தை சம்வர்த்தனின் மேல் வீசினான். அது இடி மின்னலுடன் பயங்கரமாக வானத்திலிருந்து இறங்கி வருவதைக் கண்டு "பயப்படாதீர்கள்" என்றார் சம்வர்த்தனர். வஜ்ஜிராயுதத்தைப் பார்த்தார். "நில் அப்படியே" என்று சொன்னார். அது செயலிழந்து ஒரு விறகுத்துண்டு போல அப்படியே நடுவழியில் நின்றது. இதைக் கண்டு இந்திரனே பயந்து போனான். பூமிக்கு வந்தான். சம்வர்த்தனரை வணங்கினான். அவர் செய்த யாகத்தில் பங்கு பற்றினான். ஆகுதியையும் ஏற்றுக்கொண்டான். சம்வர்த்தனரை வணங்கி வேண்டி வஜ்ஜிராயுதத்தைப் பெற்றுக்கொண்டு இந்திரலோகம் போனான். வியாழபகவான் பொறாமையால் மெலிந்தது தான் அவர் கண்ட லாபம். பார்த்தீர்களா பொறாமை பழிபாவத்திற்கு அஞ்சாமல் பாவம் செய்யத் தூண்டும் ஆகவே நாம் பொறாமைப்படாமலிருக்க வேண்டும்.

**வெகு விரைவில் மாதாஜி எழுதும்**

**"சிவன் அருட் கதைகள்" தொடர் வெளிவரும்.**

# நிட்டூர நிராலே நிர்ப்பயன்

க.சிவசங்கரநாதன்
சாசாலை

மங்கையர் மையல் வலையிலே பட்டு ஊசல்படும் பரிசினின்றும் ஒழியவேண்டும் என அருணகிரியார் முருகனிடம் வேண்டிக் கொண்டார். அப்போது முருகனை அவர் விளிக்கிறார் ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு வகையில் அப்பெருமானுடைய இனிய புகழை இணைக்கும் வித்தகர் அவர். இந்தப் பாட்டில் முருகப்பெருமான் கிரவுஞ்சசங்காரம் செய்த வீரச்செயலைச் சொல்கிறார் இறைவன். நல்லார்களுக்கு அருள்புரிந்து அல்லார்களுக்கு அடல்புரிந்து காப்பாற்றும் இயல்புள்ளவன் ஒறுத்துக் கருணை புரிவதும் அணைத்துக் கருணை புரிவதும் ஆகிய இரண்டும் அவனுடைய கருணைச் செயல்களே ஆயினும் நிகழ்ச்சி முறையில் வேறு வேறாகத் தோன்றுகின்றன. துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் என்று இரண்டையும் இணைத்துக் கூறுவர். வீரச்செயலால் தீயவர்களை ஒறுத்தும் அருட்செயலால் அன்பர்களை அணைத்தும் அருள்புரியும் அப்பன் அவன் வீரச்செயல்களைப் பராக்கிரமமென்றும் அருட்செயலைத் திருவிளையாடல் என்றும் வகுப்பது மரபு.

இங்கே அருணகிரியார் முருகனிடம் வேண்டுவது துன்ப நீக்கம் மையல் வலையில் அகப்பட்டு ஊசல்படும் அல்லலைப் போக்க வேண்டும் என்பது. அது ஒரு வகையில் துஷ்டநிக்கிரகத்தைப் போன்றதே ஆதலின் அதற்கு ஏற்ப பொருத்தமுள்ள துஷ்டநிக்கிரகச் செயலை நினைக்கிறார் மையல் வலை என்றும் தடையினால் போகவேண்டிய போக்கிலே செல்ல இயலாமல் தடைப்பட்டு நிற்பதை நீக்கவேண்டும் என்ற வேண்டுகோளை விண்ணப்பித்துக் கொள்கிறவர் தடைபோல நின்ற கிரவுஞ்சமலையை ஊடறும்படி துளைத்தவனே என்று முருகனைத் துதிக்கிறார்.

**தட்டு டறவேல் சயிலத்து எறியும்**
**நிட்டு ரநிரா குல நிர்ப்பயனே**

இடையிலே தடை ஏதும் இன்றி எல்லாம் அறும்படியாக வேலாயுதத்தைக் கிரவுஞ்சமலையின் மேல் எறியும் கொடிய இயல்புள்ளவனே கவலையற்றவனே அச்சம் இல்லாதவனே என்பது இதன் பொருள். கிரவுஞ்சமலை பாறை பாறையாகத் தட்டுத்தட்டாகச் செறிந்திருப்பது அது தேவர்களுக்கு இடுக்கண் புரிந்து வந்தது நாலுபேர் நடக்கும் வழியில் நடுவிலே நின்று தடை பண்ணும் பறக்கும் சக்தி அதற்கு இருந்தமையால் திடீர் திடீரென்று பறந்து சென்று எங்காவது உட்காரும் அடியில் அகப்பட்டவர்களெல்லாம் நசுங்கி போவார்கள். வழியிலே திடீரென்று தடை போட்டாற் போல் வந்து நின்றால் போய்க் கொண்டிருப்பவர்கள் மயங்கி மேலே செல்லமாட்டாமல் திகைப்பார்கள். முருகன் அந்த மலையின் மேல் வேலை விட்டான் அதன் உடம்பைச் சல்லடையாகத் துளைத்தது அது. படலம் படலமாக இருந்த தட்டுக்களெல்லாம் ஊடே அறும்படி அது துளைத்து விட்டது சும்மா இருக்கும் ஒரு மலையின் மேல் இப்படி எறிந்தால் அது கொடிய செயல்தான். ஆனால் இங்கே அந்தக் கொடிய செயல்வேறு ஒரு கொடுஞ்செயலை மாற்றியதாதலின் நன்மை விளைந்தது கிரவுஞ்சமலை வடிவமாக நின்றவன் ஓர் அசுரன். அவன் மிகவும் கொடியவன் சூரனுக்குத் துணையானவன் அவன் கொடுஞ்செயல் புரிந்த நிஷ்டூரனாக இருந்தான். அவனுடைய கொடுமையை போக்க அவனை அழிக்கத்தானே வேண்டும்? கொடியவனுக்குக் கொடுமை புரிந்து ஒறுத்தால் தான் மற்றவர்களுக்கு நன்மை விளையும் ஆதலின் கிரவுஞ்சத்துக்குக் கொடுமை புரிந்தான் முருகன் இதைக் கருதியே

**வேல் சயிலத்து எறியும் நிட்டூர** என்று கூறினார் அருணகிரியார். முருகனை அடைந்தவர் யாரேனும் அவருடைய கவலை ஓடிவிடும் பிறபிற தலைவர்களை அடைந்தவர்களுக்கு ஓரளவு தான் கவலை போகும். அந்த தலைவர்களுக்கே சில

கவலைகள் இருக்கும் தம் கவலையையே முழுவதும் போக்கிக் கொள்ள வகை தெரியாதவர்கள் பிறர் கவலைகளை எவ்வாறு நீக்கமுடியும். இறைவனே குறைவிலா நிறைவாக இருக்கிறவன் ஆதலின் அவனுக்கே கவலையே இல்லை. அதனால் பிறருடைய கவலைகளைப் போக்கும் ஆற்றல் உள்ளவனாக இருக்கிறான். அந்த ஆற்றல் வேறு யாருக்குமே இல்லை. அவனைப் போல வேறு ஒருவன் இருக்கிறான் என்று ஒப்புக்கூற யாருமே இல்லை. அவன் தனக்கு உவமை இல்லாதவன் அவனை அடைந்தவர்களுக்கு மனக்கவலை நீங்கும் அடையாதவர்களுக்கு அது நீங்குவது அரிது இந்த உண்மையை வள்ளுவர் கூறுகிறார்

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

தன் அடியார்களுடைய கவலையை போக்கும் கருணையாளனாகிய முருகன் கவலை சிறிதும் இல்லாதவன் ஆதலின் நிராகுல என்கிறார் அருணகிரியார் அநுபூதி இரண்டாம் பாடலிலும் **உல்லாச நிராகுல யோகவிதச்**
**சல்லாப விநோதனும் நீயலையோ** என்று பாடினார்

கிரவுஞ்ச சங்காரமென்னும் கொடுஞ்செயலைச் செய்த நிட்டூரனென்று இழிப்பது போலப் புகழ்ந்து பின் கவலையில்லாதவனே என்னும் பொருள்பட நிராகுல என்றார் அடுத்தபடி நிர்ப்பயனே என்கிறார்.

தனக்கு மிஞ்சித் தலைவன் இருந்தால் அஞ்சி ஒழுகவேண்டும் தனக்கு ஒருவரால் துன்பம் வருமானால் அச்சம் உண்டாகும் ஏதேனும் ஒரு பொருள் இல்லாத இடத்தும் அச்சம் உண்டாக நியாயம் உண்டு அதிகாரத்தாலும் பலத்தாலும் நிறைவாலும் அவற்றிற் குறைந்தாருக்கு அவை உடையார் அச்சத்தை உண்டாக்குவார். இறைவனோ தனக்கு மேல் யாரும் இல்லாத தலைவன் அவன் ஆணையினால் அண்ட கோடிகள் யாவும் இயங்குகின்றன. அமரர் முதலிய யாவரும் தொழிற்படுகின்றனர். அதனால் மேல் உள்ள ஒருவனுடைய அதிகாரத்துக்கு அஞ்சும் அச்சம் அவனுக்கு இல்லை அவன் வரம்பிலா ஆற்றல் உடையவன் ஆதலால் பிறரால் தீங்கு வரும் என்ற அச்சத்துக்கும் இடம் இல்லை குறைவுயாருக்கு வேண்டுவன அருளும் நிறைவுடையான் அவன் ஆதலின் ஒன்று வேண்டுமென்ற குறையினால் அச்சம் வர வாய்ப்பு இல்லை எனவே எவ்வகையினும் எள்ளளவாவது அச்சம் உண்டாகாத நிலையில் இருப்பவன் அவன் அச்சந்தரும் யாவற்றினும் மிகக் கொடியதாகிய மரணபயத்தையே தன்னை அடைந்த அன்பர்களிடம் வராமல் செய்யும் திறம் படைத்தவன் அவன். அவனிடம் பயம் அணுகுமா? ஆதலின் அவன் யாவர்க்கும் என்றும் எள்ளளவேனும் அஞ்சவேண்டிய நிலையில்லாதவன் நிர்ப்பயன்.

தடைநீங்க வேலெறியும் பெருமான் அருள்கிடைத்தால் மையல் தளையென்னும் தடை நீங்கும். கவலையற்ற பெருமானை அண்டினால் இப்படி அகப்பட்டுக் கொண்டோமோ என்ற கவலை போகும் நிர்ப்பயனாகிய அவன் கருணை கிடைப்பின் இனி இப்படி ஏதேனும் வந்து துன்புறுத்துமோ என்று அஞ்சவேண்டிய நிலை வராமற் போகும். தடை நீங்கிக் கவலையின்றி அச்சமொழிந்து வாழலாம் அதனால் கிரவுஞ்சத் தடை நீக்கிய நிட்டூர நிர்ப்பயனாகிய முருகனை விளித்து இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார் அருணகிரியார்.

**மட்டூர் குழல் மங்கையர்மை யல்வலைப்**
**பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்**
**தட்டூ டறவேல் சயிலத் தெறியும்**
**நிட்டூ ரநிரா குலநிர்ப்பயனே**

நாடகம்:

# தபோபலம்

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

நாடக மாந்தர்:
விசுவாமித்திரர்,
வசிட்டர்,
சபலை.

காட்சி: 1

இடம்: ஆச்சிரமம்

வசிட்டர் ஆச்சிரமத்தில் நிட்டையில் நிலைத்திருக்கின்றார். விசுவாமித்திரர் வருகின்றார்.

**விசுவாமித்திரர்:** வசிட்ட முனிவருடைய தபோவனம் இது தானா?

**வசிட்டர்:** ஆம் அடியேனுடைய ஆச்சிரமம் இதுவே தான்.

**விசுவா:** நான் விசுவாமித்திரன்! வந்திருக்கின்றேன்

**வசிட்டர்:** (நிட்டை நீங்கி) ஆ! வரவேண்டும் அரசே! தங்கள் பாதம் பட இந்த ஆச்சிரமம் செய்த தவப்பயன் இது அன்றோ!!

**விசுவா:** ஆகட்டும்! முனிவருடைய இனிய மொழி உள்ளத்தை உருக்குகின்றது!!

**வசிட்டர்:** அரசே! முதலில் ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்!! அப்பால் அனைத்தையும் ஆசறுதியாக அலசிக்கொள்வோம்.

**விசுவா:** தவ அரசரின் வாக்கைத் தட்டமாட்டேன் (அமர்தல்)

**வசிட்டர்:** அரசருடைய வருகையால் எங்கள் ஆச்சிரமம் ஆனந்தம் அடைகின்றது! புதுப்பொலிவு பெற்றுப் பூரிப்படைகின்றது!

**விசுவா:** புவி அரசர்களாகிய எமக்கு இதுவும் ஓர் தர்மம். புண்ணியஆச்சிரமங்களுக்கு நண்ணுவோம். அங்கு தவ முனிவர்களைத் தரிசிப்போம். அவர்களுடைய ஆசீர்வதிப்பு எமது அலையும் மனத்தை ஒருநிலைப்படுத்தும்.

**வசிட்டர்:** எல்லாம் தவப்பயன் அரசே! தாங்கள் எம் போன்ற தவத்தவர்களைத் தரிசிப்பது போல் எமக்கும் தங்களைப் போன்ற தருமத்தைப் போற்றும் புண்ணிய அரசர்களைக் கண்டு கலந்து உரையாடுவது நமது பூர்வ புண்ணியப் பேறென உளம் மகிழ்வோம்.

**விசுவா:** முனிவர்கள் முனிவு தணிந்த மனத்தோடு சாற்றும் நல்லாசிகள் நன்மையைப் பெருக்கும். பகையைச் சுருக்கும். இன்று தாங்கள் செய்யும் அன்று நான் நின்று செய்திருந்தால் அதுவும் வந்து கை கூடும்.

**வசிட்டர்:** மன்னவர்கள் மகாமுனிவர்களை விட எந்த வகையில் தாழ்ந்தவர்கள்...? உண்மையை உள்ளவாறு உரைத்தால் தவ மன்னவரை விடத் தரணி மன்னவர் மேலானவர் எனலாம்.

**விசுவா:** முனி சிரேட்டரான வசிட்டரே! அது எவ்வாறு பொருந்தும்?

**வசிட்டர்:** அரசர் அதை அறியாதிருக்க இயலாது! கேளுங்கள்! பிரமாவின் புத்திரர் குசர், அவரோ அரசர், அவருடைய மைந்தர் குசநாபர், அவருடைய புத்திரர் காதி... காதி புத்திரர் விசுவாமித்திரர் அல்லவோ தாங்கள்!!

**விசுவா:** முனிவர் உலகம் எங்கு எல்லாம் அழைத்துச் சென்றாலும் மீண்டும் ஆச்சிரமத்தை அடைந்து விட்டீர்கள் (சிரிப்பு) உண்மைக்கு எக்காலத் திலும் ஏன் முக்காலத்திலும் அழிவு என்பது இல்லை.

**வசிட்டர்:** தாங்கள் மன்னவர்களுக்கு எல்லாம் மன்னராக விளங்குவது போல ரிஷிகளுக்கு எல்லாம் ராஜரிஷியாகவும் திகழுகின்றீர்கள்...

**விசுவா:** இவ்வாறு மனந் திறந்து மனம் விட்டுப் பேசுவதற்காகத் தானே ஆச்சிர மத்தை நாடினேன்...!

**வசிட்டர்:** தங்கள் திருவடியைத் தழுவுவதற்கு இந்த ஏழையினுடைய ஆச்சிரமத்து மண்மகள் பூர்வாச்சிரமத்தில் என்ன தவம் பண்ணினாளோ என்று எனது உள்ளம் உவகையில் பூரிக்கின்றது.

**விசுவா:** வசிட்டரே! தவ சிரேட்டரே!! இந்த ஆச்சிரமம் எல்லா வகையாலும் மிக மனோரம்மியமாக விளங்குகின்றது!

**வசிட்டர்:** எல்லாம் இந்த ரிஷி மன்னராகிய விசுவாமித்திரருடைய ஆசீர்வாதம்!!

**விசுவா:** வசிட்டரே! நாம் சதுரங்க சேனையோடும் உலகத்தை வலம்வருகின்றோம்.

**வசிட்டர்:** அது அரசருக்குரிய கடமை!

**விசுவா:** நாம் நமது சுற்றுப்பயணத்தில் நாடுகள் பலவற்றைப் பார்த்தோம்.

**வசிட்டர்:** நன்று!

**விசுவா:** வேற்றொலி விரவாத ஆற்றொலியோடு நாடுகளை ஊடறுத்துச் செல்லும் ஆறுகள் பலவற்றைப் பார்த்துத் தேறுதல் அடைந்தோம்!

**வசிட்டர்:** ஆறு இல்லாத ஊருக்கு அழகே அருமை என்பர்!

**விசுவா:** வானுயர்ந்த மலைகளைப் பார்த்தோம். தேன் பொதிந்த சோலைகளைப் பார்த்தோம். ஏரி, கடல், வனம், வனத்தில் விலங்குகளையும் கண்டு வந்தோம்!!

**வசிட்டர்:** அவை கண்ணிற்கும் கருத்திற்கும் கவினைத் தரும். கவலையைக் களையும் உள்ளத்தில் எழுச்சியை உருவாக்கும்.

**விசுவா:** புண்ணிய ஆச்சிரமங்கள் விண்ணின் கீழ் விளங்கக் கண்டோம். உவகை கொண்டு நின்றோம்.

**வசிட்டர்:** இறைவனுடைய கைபுனைந்து இயற்றாக் கவின் கொள் இயற்கை இன்பங்கண்டு இன்புறுவதும் ஓர் தெய்வீக உணர்வேயாகும்.

**விசுவா:** வசிட்டமுனிவருடைய இந்த ஆச்சிரமும் சூழலும் போல எதுவுமே

மனத்தைக் கவரமும் இல்லை. மனச் சஞ்சலத்தைப் போக்கி சாந்தியைத் தரவும் இல்லை.

**வசிட்டர்:** எமது ஆச்சிரமத்தை எவர் போற்றிப் புகழ்ந்தாலும் அது புகழாகாது! மன்னரும் மகரிஷியுமான தங்கள் நாவிலிருந்து வரும் வாக்கு வளமானது. அது எம்மை வாழச் செய்யும். எம் பணியைத் தொடருவதற்கு உற்சாகம் ஊட்டுகின்றது!

**விசுவா:** வசிட்டரே ஆச்சிரமச் சூழலை ஒரு தரம் சுற்றிப் பார்க்கலாமா?

**வசிட்டர்:** அரசர் எப்போது கேட்பார் என்று ஆவலோடு காத்திருந்தேன். வாருங்கள் அரசே!! நானும் உடனாக வருவேன்.

**(திரை)**

**காட்சி: 2**
**இடம்: ஆச்சிரமச் சூழல்**

**வசிட்டர்:** அரசே! அதோ அவதானியுங்கள்! எங்கள் ஆச்சிரமம் பலவிதமான பறவைகளால் நிறைந்துள்ளது.

**விசுவா:** ஆம் ரிஷியே!! பறப்பன எல்லாம் பறவைகளாக இருந்தாலும் இந்தப் பறவைகள் சிறப்பாகத் தெரிகின்றன...!

**வசிட்டர்:** இன்னும் பலவகையான விலங்குகள் விளங்குகின்றன. அவை யாவும் செயலில் கொடிய இனத்தைச் சேர்ந்தவைகளாயினும் இங்கு வருவோருக்கு தீங்கு எதுவும் செய்யச் சிந்திக்கமாட்டாது!!

**விசுவா:** ஆம் அதோ நடமாடுகின்றன. அவை யாவும் தங்கள் விருப்பம் போல உலாவுகின்றன.

**வசிட்டர்:** இங்கு பலரும் வருவார்கள். சிலர் நெடுநாள் தங்குவார்கள். சிலர் வந்த அன்றே திரும்பி விடுவார்கள். பழகியவர்களாயினும் சரி பழகாதவர்களாயினும் ஆகட்டும் விலங்குகள் யாவும் அன்போடு அருகே செல்லுவன.

**விசுவா:** இந்த ஆச்சிரமம் மகரிஷிகள் மகிழ்ந்து உறைதற்கு உகந்த உன்னதமான இடமாகக் காட்சி தருகின்றது!!

**வசிட்டர்:** மான்கள் மனப்பயமே இன்றிச் சஞ்சரிக்கின்றன.

**விசுவா:** எங்கும் தவஞ் செய்யும் முனிவர்களைத் தரிசிக்க நல்ல வாய்ப்பு

**வசிட்டர்:** தம் கருமஞ் செய்யும் தவத்தவர்கள் எண்ணிக்கைக்கும் இங்கு தாழ்வு இல்லை, அரசே!!

**விசுவா:** உண்மை தான்...! முனிவர்கள் பார்க்கும் இடம் எங்கள் காணப்படுகின்றார்கள்!! அவர்களைக் காணக் கொடுத்து வைத்தவனாகையால் நானும் தவஞ் செய்திருக்க வேண்டும். அவர்கள் அக்கினி போல ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள்...!

**வசிட்டர்:** முனிபுங்கவர்களில் சிலர் கிழங்கு வேர் பழங்களையே இனிதாக உண்ணுகின்றார்கள்.

**விசுவா:** சொல்லும் வார்த்தைகள் செவிக்கு இன்பம் பயக்கின்றன!!

**வசிட்டர்:** இன்னும் முனிவர்களில் சிலர் உதிர்ந்த சருகுகளை உணவாக உட்கொள்ளுகின்றார்கள்.

**விசுவா:** கேட்க அற்புதமாக இருக்கின்றனது!

**வசிட்டர்:** வேறும் பலர் தண்ணீரையே பருகுகின்றார்கள்!!

**விசுவா:** தவப்பயன் இருந்தாலும் எதையும் சாதனை பண்ணலாம்!!

**வசிட்டர்:** அரசே! ஒரு சில முனிவர்கள் காற்றையே புசிக்கின்றார்கள்!!

**விசுவா:** உக்கிரமான தவம் அது!

**வசிட்டர்:** அரசே இவற்றைப் பாருங்கள்!! மணம் கமழ்ந்து தேன்துளி சிந்தும் மலர் தரும் மரங்கள் இவை...

**விசுவா:** வாசனை வீசுகின்றது! வண்ணம் மிளிர்கின்றது....! அழகு கவருகின்றது! தேன் துளிர்க்கின்றது!! மலர் வனத்தில் மனம் பறி கொடுத்தால் மன நோய் மாறும்! உள்ளத்தில் பூரிப்புக் குடிகொள்ளும் மரங்களும் செடிகளும் மலர்ப் பொலிவோடு பொலிகின்றன!!

**வசிட்டர்:** அரசே! இந்த ஆச்சிரமத்தில் நடமாடியவர்கள் காமக் குரோதங்களை வெல்வார்கள். ஞான இந்திரியங்களையும் கன்ம இந்திரியங்களையும் தம் வசமாக்கும் வல்லவர்களாவார்கள். நிர்மலமாக அந்தக் கரணங்களை நிறுத்துவார்கள்! நிர்விகல்ப சமாதியில் நிற்பார்கள்....

**விசுவா:** வசிட்ட முனிவரே!! பார்ப்பதற்கு மட்டும் அல்ல ஆச்சிரமம் கேட்பதற்கும் இன்பமாகத் தான் இருக்கின்றது!

**வசிட்டர்:** இது புலன் வழிச்சேறல் பொன்றும் இடம்!!

**விசுவா:** ஆம், இந்த ஆச்சிரமம் பிரம உலகத்தைப் போல பிரகாசித்துக் கொண்டிருப்பது பிரசித்தம்!!

**வசிட்டர்:** மன்னவருக்குரிய நீதியும் மகா முனிவருக்குரிய தவமும் இணைந்து வார்த்தைகள் நேர்மையாக வருகின்றன!

**விசுவா:** ஆஹா! கண்கள் கண்டு களிக்கும் காட்சிகள்! கருத்திற்கு இனிய கதைகள்!! மனமாற்றத்தால் வந்த காரியத்தை மறந்து விட்டேன்.

**வசிட்டர்:** மன்னர் மறந்தது யாதோ?

**விசுவா:** குருவணக்கம் வசிட்ட ரிஷியே! தப பலமுள்ள தங்களை முதலில் நான் வணங்க ஆசைப்படுகின்றேன்!! (வணங்குதல்)

வசிட்டர்: (ஆசீர்வதித்து) தங்களுக்கு மங்களம் பொங்கட்டும்!!

விசுவா: நான் முனிவரால் ஆசீர்வதிக்கப் பெற்றேன்!!

வசிட்டர்: மன்னருடைய நல்வருகை என்னுடைய தபோ பலத்திற்குத் துணை செய்யட்டும் அரசே...!

விசுவா: வசிட்டரே! நினைத்ததை வெளிப்படுத்துங்கள்

வசிட்டர்: ஆசனத்தில் அரசே அமர்ந்து கொள்ளுங்கள்!!

விசுவா: தங்கள் விருப்பத்திற்கு மதிப்பளிக்கின்றேன் (அமருதல்)

வசிட்டர்: அகோ, வாரும் பிள்ளாய்! அதிதி பூசைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வாய்


**(திரை)** (தொடரும்...)

◆◆◆



வேண்டுதல் வேண்டாமை வேண்டும். அங்கே ஒன்றுமில்லை நீயுமில்லை நானுமில்லை எல்லாம் ஏகமாச்சுதடி. எல்லாரிடத்தும் அவனைப் பார்த்திடல் வேண்டும் எல்லாரையும் அவனெனக் காணவேண்டும். இறைவன் என் இதயம் நீங்கான். ஒரு கணநேரம் தனிலும் என் உள்ளத்தைப் பிரியான். ஆதியில் ஒரு வார்த்தை உண்டு. அது இறைவனோடு இருந்தது. அது இறைவனாய் இருந்தது. அதைச் சிந்தித்தால் முழு உண்மையும் உணரலாம். அன்புடன் அறிவும் அறிவுடன் அன்பும் கலந்தவளாய்இரு. பயப்படாதே தையல் நாயகி உன் தஞ்சம். நினைப்பூட்டிக்கொள் பட்டுப் போகாதே. இறைவனை உன் உள்ளே வளர்த்துக்கொள். நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை எல்லாரித்தும் நானிருக்கிறேன். என்னிடத்தில் எல்லாரும் இருக்கிறார்கள். ஞாலத்தில் அமைதி நிலவாது. மாயாகாரியத்துள் அன்புக் கனலை மூட்டி, தீயை வளர்த்து, சுத்தமாய்ச் சீவி (சுத்தமாய்) வாழ். ஜோதி-அகம்-ஆஜாதி அகம். எங்கும் வெளிச்சமடி உள்ளும் வெளிச்சமடி புறமும் வெளிச்சமடி பாடிப் பாடித் தேறடி. வழியடியோமெனத் தினமும் வந்தனை செய். சிவதொண்டு செய்வார்க்குப் பயமில்லை குறைவில்லை கொடையாளியாய் இரு. பத்துப்பேருக்கு இலேசாய் சாப்பாடு கொடு. அன்னம் அளிக்கும் கை தாயின்கை. கொடுக்கக் கொடுக்கப் பெருகும் மனதை இறுக்காதே. முடிச்சை அவிழ். இறைவனுக்குக் காணிக்கையாய் இரு. 'மா' வெனும் அரும்பெரும் பொருளை உணர்ந்து நட. 'மா' வெனில் இலட்சுமி, தலைவி, காக்கும் தாய், பெருந்தேவி, பன்றி, ரசமுள்ள பழச்சுவை, மா விருட்சத்தின் நிலழ்; அடைக்கலம் புகுந்தோரை அணைக்கும் தாய். கற்பகத் தாய். சிந்தனையை, நல்லறிவு, நற்கருமம், நல்லன்பால் நிரப்பிக் கொள். பாடுபட்டு ஒன்றும் செய்யாதே இயல்பாய் வருகிறதைச் செய். அல்லது சும்மாயிரு. தேடிப் போகாதே. தேடியது தானே உன்தாள் சேரும். அவனும் நீயும், நானும் நீயும் ஒன்றே. நானின்றி அவனில்லை. அவனின்றி நானில்லை. இணையற்ற தொடர்பு பிணைந்திருக்கிறது. எனக்கும் உனக்கும் பேதமுண்டோ. யார்தான் நின்னை அறிய வல்லா்? இறைவனுடைய இராச்சியம் இரகசியம் பொக்கிஷம் முழுக்க உன்னிடத்தில், உன் இதயத்திலிருக்கிறது.

[திருமதி இரத்தினா நவரத்தினம் அம்மையாருக்கு கொழும்புத்துறை யோகசுவாமிகள் போதித்தவை.]



# ஆலய அமைப்பின் தத்துவம்

**ஜி வன்மீகநாதன்**

**கட்டிடக் கலைஞர், ஸ்தபதி, மகாபலிபுரம்.**

**கோயில் அமைப்பும் தத்துவமும்**

**கர்ப்பக்கிருகம்-சிரசு. அர்த்த மண்டபம்-முகம். அந்தரானமண்டபம்-கழுத்து, மகா மண்டபம்-மார்பு. மணிமண்டபம்-வயிறு. உட்பிராகாரம்-தோள்கள். வெளிப்பிராகாரம்-கைகள்.**

**இரு பிராகார இடைவெளி-விலாப் புறங்களுக்கும் கைகளுக்கும் உள்ள இடைவெளி.**

**பிராகாரப் பலகணிகள்-வெசிகள்.**

**விக்கிரகம்-ஆன்மா. கர்ப்பக்கிருகநிலைத் தூண்கள்-கண்கள்.**

**அந்த நிலை மேலுள்ள கல்-நாசி. சுவர்க்கற்கள்-எலும்புகள். தூண்கள்-நரம்புகள். கோபுரம்-ஸ்தூல லிங்கம்.**

**ஏழு மதில்கள்-இரத்தம், எலும்பு, சுக்லம், தசை, தோல், மூளை.**

**ஐந்து மதில்கள்-அன்னமயம், பிராணமயம், மனோமயம், ஞானமயம், ஆனந்தமயம்.**

**மூன்று மதில்கள்-ஸ்தூல, சூக்ஷம, காரண சரீரங்கள்**

**ஆலயம்** என்பதை ஆ+லயம் என்று பிரிக்கலாம்.

ஆ' என்பது ஆன்மா என்றும், லயம் என்பதற்கு சேருவதற்குரிய இடம் என்றும் பொருள்.

ஆகவே ஆலயம் என்பதற்கு, கடவுள் திருவடியில் ஆன்மா லயித்திருப்பதற்குரிய 'இடம்' எனப் பொருள்.

ஆலயத்தைக் கோயில் என்றும் சொல்வது மரபு.

கோ+இல் = கோயில்

'கோ' என்பது கடவுள் என்றும், 'இல்' என்பது தங்குமிடம் எனவும் பொருள்.

ஆகவே, கடவுள் நிலைத்திருக்கக் கூடிய இடத்திற்குக் கோயில் என்று பெயர்.

பொதுவாக ஆலய அமைப்பில், கருவறை (கர்ப்பக்கிருகம்) அந்தராளம், அர்த்த மண்டபம் (முகமண்டபம்) சாவாகாச அந்தராளம், மகாமண்டபம், நிருத்த மண்டபம் (நடன மண்டபம்) விருஷப மண்டபம், பிராகாரம், வாகனம், பலிபீடம், கொடிமரம், பரிவார ஆலயம் (சிறு கோயில்கள்), கோபுரம், திருக்குளம், திரு மதில், ஆகிய அங்கங்கள் அமையப் பெற்றனவாக இருக்கும்.

கோயில் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது-மனித உடம்பில் பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், துடை நிருத்த மண்டபமாகவும், தொப்புள் பலிபீடமாகவும், மார்பு மகாமண்டபமாகவும், கழுத்து

அர்த்த மண்டபமாகவும், சிரசு-தலை கர்ப்பக் கிருகமாகவும் அமையப் பெற்றுள்ளது.

**கருவறை**

கோயிலின் கருவறையை மூலஸ் தானம் என்றும், கர்ப்பக்கிருகம் என்றும் சொல்வதுண்டு.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குக் கருவறை என்று பெயர்.

கருவறையைச் சதுரமாகவும் நீண்ட சதுரமாகவும் 8 பட்டமாகவும் 6 பட்ட மாகவும் விருத்தமாகவும் (வட்ட வடிவத் துடன்) அமைக்கலாம்.

இக்கர்ப்பக்கிருகத்தில் அடங்கும் உறுப்புகள் முறையே, உபபீடம் அதிஷ் டானம், பாதம், பிரஸ்தரம் விமானம் என்ற அலங்கார உறுப்புகள் அமையப் பெற்றன வாகும்.

கருவறையின் உட்புறத்தில் அமை யும் மூல விக்கிரகத்தைப் பதவின்யாச முறைப்படி பிரதிஷ்டை செய்தல் வேண்டும் அதாவது விநாயகராக இருப்பின் நான் காவது பதத்திலும் மற்றும் சிவன் பிரமன், விஷ்ணு போன்ற கடவுள்களின் அவரவர் களுக்குரிய பதத்தில் அமையப் பெறுதல் நன்று.

**அந்தராளம்**

கருவறையையும் அர்த்தமண்ட பத்தையும் (முகமண்டபம்) இணைக்கும் பகுதிக்கு அந்தராளம் என்று பெயர்.

**அர்த்தமண்டபம்**

அந்தராளத்திற்கு அடுத்து அமை யும் மண்டபம் அர்த்தமண்டபம். குறிப்பாக இந்த மண்டபம் இறைவனிடம் அருகில் சென்று வணங்குவதற்காகவே அமைக்கப் பெற்ற மண்டபம் என்று சொல்லலாம். இம் மண்டபமானது கருவறையின் அளவில் அடிப்படையாகக் கொண்டு இதனையே முன் மண்டபம் என்றும் கூறுவதுண்டு.

**சாவகாச அந்தராளம்**

முகமண்டபத்தையும் மகா மண்ட பத்தையும் இணைக்கும் பகுதியைச் சாவகாச அந்தராளம் என்பர்.

இத்தகைய சாவகாச அந்த ராளத்தில் வாயில் அமைப்பதும் உண்டு.

**மகாமண்டபம்**

முகமண்டபத்திற்கு அடுத்து அமைவது மகாமண்டபம் ஆகும். இந்த மண்டபத்திற்கு அடுத்தாற்போல் நிருத்த மண்டபம்,சோபன மண்டபம், வாகன மண்டபம் போன்ற மண்டபங்கள் அமைப்பதுண்டு. கோயில்களில் அமையும் இம் மண்டபத்தில் பல வகைகள் உண்டு. நான்கு கால் மண்டபம், எட்டுக்கால் மண்டபம், 16 கால் மண்டபம், 1000 கால் மண்டபம், வசந்தகால மண்டபம், கும்பத் தூண்களைக் கொண்டும், யாளித் தூண்களைக் கொண்டும் அமைப்பதுண்டு.

இம் மண்டபங்களில் உபபீடம், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம் என்ற அலங்கார உறுப்புகள் மிகவும் அழகுடன் அமைக்கப்பெறும்.

பாதம் என்று சொல்லப்படும் தூண்களில் மிக அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக அமையும்.

**பரிவாரக் கோயில்கள்**

பிராகாரத்தில் அமைக்கப்பெறும் சிறு கோயில்களுக்குப் பரிவாரக் கோயில்கள் என்று பெயர். அதாவது மூல மூர்த்திக்கு ஏற்ற உருவங்கள் அமைப்ப துண்டு.

**பிராகாரம்**

கருவறையைச் சுற்றி வலம் வரும் இடத்திற்குப் பிராகாரம் என்று பெயர்.

இப்பிராகாரத்தையே ஏழு பிராகாரமாக செய்வது உண்டு. இத்தகைய

பிராகாரங்களில் கோபுரங்கள் அமையப் பெறும்.

ஒவ்வொரு பிராகாரத்திற்கும் ஒவ்வொரு பெயரும் முறைப்படி கூறியுள்ளார்கள்.

முதற் பிராகாரம் அந்தர் மண்டபம் என்றும், இரண்டாம் பிராகாரம் அந்தர் ஹாரை, மூன்றாம் பிராகாரம் மத்யஹாரை, நான்காம் பிராகாரம் பாஹ்யஹாரை, ஐந்தாம் பிராகாரம் மர்யாதா, ஆறாம் பிராகாரம் மஹாமர்யாதா, ஏழாம் பிராகாரம் பிராவேசம் என்றும் ஆலயத்துள் அமையும். இத்தகைய பிராகாரத்தில் பரிவார மூர்த்திகளையும் மண்டபங்கள் போன்ற வற்றையும் அமைப்பதுண்டு.

பிராகாரங்களைக் கருவறை அளவின் அடிப்படையிலும், பதவின்யாச அடிப் படை முறையிலும் அமைப்பது மரபு.

**வாகனம்**

மூலமூர்த்திக்கு ஏற்ற வாகனங்கள் அமைப்பதுண்டு. விஷ்ணு கோயிலாக இருப்பின் கருடனையும், சிவன் கோயிலாக இருப்பின் ரிஷபத்தையும், சக்தி கோயிலாக இருப்பின் சிம்மத்தையும், விநாயகர் கோயிலாக இருப்பின் மூஷிகத்தையும், சுப்பிரமணியர் கோயிலுக்கு மயிலையும் அமைப்பதுண்டு.

**பலிபீடம்**

வாகனத்திற்கு அடுத்ததாக அமைக் கப்பெறுவது பலிபீடம் ஆகும்.

இப்பலிபீடத்தை தீபலிநாதர் என்று கூறுவதுண்டு. இந்தப் பலிபீடத்திற்கு உபபீடம், அதிஷ்டானம் போன்ற அழகிய வர்க்கங்களை அமைத்து அதன் மேல் பலிபீடத்தை நிர்மாணித்தல் வேண்டும்.

**கொடிமரம்**

கொடிமரத்தின் அடிப்பாகத்தைக் கருங்கற்களைக் கொண்டு உறுதி செய்தல் வேண்டும்.

கொடிமரம் சந்தனம், தேவதாரு, வில்வம், மகிழம் போன்ற மரங்களால் செய்வது உத்தமம்.

கொடிமரத்தை அமைப்பதன் நோக்கம்: அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும், தேவர்களை அழைப்பதன் பொருட்டும், கோயில்களைக் காப்பாற்றுவதன் பொருட்டும் இது நிர்மாணிக்கப் பெறுகிறது.

கொடிமரமானது 33 கணுக்கள் கொண்டதாக அமைத்தல் நன்று. இதன் உயரமானது விமான உயரத்தை அடிப் படையாகக் கொண்டு அமைக்கப் பெறும்.

கொடிமரத்தைச் சுற்றிக் கருங் கல்லால் உபபீடம், அதிஷ்டானம் போன்ற சோபை தரக்கூடிய வர்க்கங்களைஅமைத்து உறுதி செய்தல் வேண்டும்.

அந்த அந்த மூலமூர்த்தியின் வாகனத்தைக் கொடிமரத்தின் உச்சியில் அமைப்பது உண்டு.

**கோபுரம்**

'கோபுர தரிசனம் கடவுளின் பாத தரிசனம்' என்று கூறுவார்கள்.

கோபுரங்கள் 3 நிலை முதல் 16 நிலைகள் வரை அமைப்பதுண்டு.

கோபுரத்தின் அளவு, மூலஸ்தான அளவின் அடிப்படையில் அமைக்கப்பெறும்.

மேலும் கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பெறும் ஸ்தூபி எனப்பெறுகின்ற கலசமானது 5,7,9 போன்ற எண்ணிக்கை கொண்டதாக அமைதல் நன்று.


கோபுரத்தின் ஒவ்வொரு பிராகாரத் திலும் ஒவ்வொரு பெயர் கொண்டு கோபுரத்தை அமைப்பர்.

முதல் பிராகாரத்திற்கு துவார சோபை என்றும், இரண்டாவது பிராகாரத்திற்கு துவாரசாலை என்றும், மூன்றாவது பிராகாரத்திற்கு துவார

பிராசாதம் என்றும், நான்காவது பிரா காரத்திற்கு துவார ஹர்மியம் என்றும், ஐந்தாவது பிராகாரத்திற்கு துவார கோபுரம் என்றும் பெயர் அமைத்து அழைப்பர்.

கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் அனைத்தும் மூலமூர்த்தியின் அவதாரங் களை உணர்த்துவனவாகவும் அம்மூர்த்தி யின் புராணங்களை விளக்குவனவாகவும், திருமூர்த்தியின் அவதாரங்களை விளக்குவனவாயும் அமைக்கப்பெறும்.

***




# கோதனம்

**ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்**

**"வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்..."**
என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

**"ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்..."**
என்பர் அப்பர்.

**"யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாயுறை..."**
என்பர் திருமூலர்.

"தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையான
பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தரமுடைய அல்லவோ நம் ஆனினங்கள்."

"தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள்"
"நீறு தரு மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம்"

"விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபி குலம்"

என்று பசுவின் பெருமையைச் சண்டேசுரநாயனார் கூறியதாகப் பெரியபுராணத் தில் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் கூறுவர்.

**திருமதில்**

பிராகாரத்தைச் சுற்றிக் கோயிலின் பாதுகாப்பிற்காக, மதில் சுவர் அமைக்கப் பெறுகிறது. மதிலின் உயரமானது கோபுரத்தின் குடை வரை செய்தல் வேண்டும்.

இதில் காணும் அங்கங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றது தான் முழுமையான ஆலயமாகும்.

***

"காவலன் காவான் ஆயின் ஆபயன் குன்றும்"
என்று திருவள்ளுவரும்

"ஆன்பயன் இன்றாகும் காவலை விடுப்பின்"
என்று விநாயக புராணத்தும் கூறுவார்.

முன்னாளில் இருபெரும் வேந்தர் போரிடக் கருதியபோது ஒருவர் மற்றவர் நாட்டில் வாழும் பசு முதலிய தீங்கு செய்யத் தகாதவற்றை அங்கு நின்று அகற்றுவதும், அங்ஙனம் செய்யமுடியாதவிடத்துப் பசுக்களைக் களவினால் தாம் கவர்ந்து காத்தலும் பண்டைய தமிழரின் பேரறம். அதனைப் புறநானூறு

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாதோரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்"

என முரசறைந்து இவர்களுக்குத் தீங்கு விளையாதவாறு பாதுகாப்பாக அப்புறப் படுத்தி விட்டே போர் செய்வர் எனக் குறிப்பிடும்.

இத்தகைய கோதனங்களைப் போற்றுதலும், ஆபயன் ஆகிய பஞ்சகௌவி யங்களை அரனார்க்குத் திருமஞ்சனம் ஆட்டுவித்தலும் உயர்ந்த சிவபுண்ணியங் களாம்.

சைவசமயத்தின் கருவூலமான தேவாரத் திருமுறைகளில் பசுவின் பயன் பற்றி மூவர் முதலிகள் பாடிய பதிகங்கள் "கோதனத் திருமுறை" எனப் போற்றப்படுகின்றன.

**நன்றி: கோதனத்திருமுறை**

# முருகனும் வேலும்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.

நன்மைக்கும் தீமைக்கும் இடையே எப்போதும் போட்டியிருந்து கொண்டேயிருக்கும். ஆனால் அப்போட்டியில் இறுதியாக நன்மைதான் வெற்றியடையும் என்பதை எல்லாரும் உணர்வர். ஆனபடியால் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ என்றும் நல்லவற்றையே நினைக்க வேண்டும்; நல்லவற்றையே பேச வேண்டும்; நல்லவற்றையே நாடவேண்டும்; பரந்த சொல் பரந்த மனப்பான்மை வேண்டும். இப்பாங்கு எம்முள் நிலைக்க வேண்டுமானால் ஒருவனாகிய இறைவனிடம் ஒன்றியிருந்து வாழும் பழக்கத்தை இடைவிடாது நாம் மேற்கொள்ள வேண்டும். இதனால் என்றும் நல்லவனே வெற்றி பெறுவான் என்பது திண்ணம். இவ்வாறு நமது புராதன புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

நன்மை என்றும் வெற்றிபெறும் என்னும் உண்மையை தன்னை நாடும் அன்பர்கள் உள்ளத்து உணரும் படியாக முருகப்பெருமான் திருக்கரத்தில் வேலைத் தாங்கி வைத்திருக்கிறான். அடியார்களும் "வேல் வேல்! வெற்றி வேல்! வீர வேல்! சூரவேல்!" என நாவாரத் துதித்து நாடும் நன்மைகளையும் சித்திகளையும் பெறுகின்றனர். ஞானவேலை வழிபடுகின்றவர்கள் முருகனையே வழிபட்டவராகின்றனர். முருகன் முன்னிலையில் தலையிற் கரங்குவித்து அன்பர்கள் மனம் ஒன்றும் போது அவர்கள் முருகன் கைவேல் ஆகின்றனர்; முருகனும் முன்வந்து அவர்களை ஆட்கொள்ளுகின்றான்.

வெல் என்ற வேர்ச்சொல் முதனீண்டு வேல் என்று ஆகியது. அதனால் வேல் என்றால் வெற்றி என்ற பொருள். நமது வாழ்வில் இருவகைப் பகைவர்களை நாம் காணலாம். வெளிப்படையான பகைவர்கள் ஒருவகையினர். இவர்களை நாம் ஒருவாறு வென்றுவிடலாம். நமக்குள்ளே மறைந்து நிற்கும் பகைவர்கள் மற்றொரு வகையினர். நம்முள் நிறங்காட்டாது கரந்து நிற்கும் ஐம்புலப் பகைவர்களே இவர்கள். இவர்களை வெற்றி கொள்ள நம் உள்ளே ஒருவேல் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வேலுக்கு ஞானம் என்று பெயர். ஞானம் என்னும் விளக்கை முன்வைத்து நாம் வாழ்க்கையை நடாத்திச் சென்றால் எந்த இருளையும் முக்கியமாக எமது அகவிருளையும் நம்மாற் கடக்க முடியும். ஞானம் என்பது இறைவனை அறியும் அறிவு. அறிவை அறிவால் அறிந்துணர்ந்து அறிவாய் நின்றால் அகப் பகைவரால் நிகழும் ஆரிருள் அழிந்தொழிந்து விடும்.

எமது ஞானத்தையே முருகன் திருக்கரம் தாங்கி .நிற்கிறது. இதனால் முருகன் திருக்கை வேலுக்குத் தனிவேல் என்ற சிறப்புப் பெயரை அடியார்கள் வழங்குகின்றார்கள். மற்றவர்களை அழிக்கும் கொடிய வேல்களினின்றும் இதனைப் பிரித்து தனிவேல் என்றழைப்பதில் ஒரு தனிச் சிறப்பு தனி வேலுக்கு அமைவதை நாம் உணரலாம். முருகன் திருக்கைத் தனிவேல் கொடுமையைத்தான் தீய்க்குமேயன்றி உயிர்களை வதைக்காது. அறிவூட்டி அருளூட்டி ஆனந்தப்படுத்தும். வேல் தாங்கி நிற்கும் வேலன் எம் வாழ்வின் வழிகாட்டி. பேராவியற் கைப்பெரு வாழ்வளிக்கும் பெருமான். வேல் தாங்கி நிற்கும் வேலனை நாம் வழிபட்டுய்வோமாக.



# நல்லூரான் திருவடி

## சிவயோகசுவாமிகள் நற்சிந்தனை

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே!
இரவுபகல் காணேனெடி 1.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி 2.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி 4.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5.

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் விழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி 6.


அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாயகனென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7.

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி - கிளியே!
விளங்குநல்லூர் வாசனெடி 8.


சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே!
கலங்காத வீரனெடி 9.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி 10.

**தவத்திரு யோகர்சுவாமிகள்**



மயில் மீதேறி
நல்லூரான்
பவனிவரும்
திருக்கோலம்



இடும்பன்
வாகனத்தில்
வேலவன்
வீதியுலா
வரும் காட்சி



பதினோராந்
திருவிழாவில்
முருகப்
பெருமானின்
காட்சி






சந்நிதி முருகன் காட்சி

பிள்ளையார் நேரச்கப் பதிப்பகம், நல்லூர்.